உ

சிவமயம்



நயினாதீவு, 7ம் வட்டாரம்

உயர் வேளாண் குல திலகர்

சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்களின்

புத்திரர், அமரர்

# கணபதிப்பிள்ளை

அவர்களின் பிரிவுத்துயர் குறித்த

# நினைவு மலர்

**18 - 06 - 1999**

ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய், புகழ்மிக்க பெருந்தகை
யாய், பண்பு நிறைந்த தந்தையாய், அன்புடன்
எம்மைப் பேணிக் காத்து ஒளிவிளக்காகத்
திகழ்ந்து எம்மை நல்வழி நடாத்தி, வையத்
துள் வாழ்வாங்கு வாழ்ந்து, அன்புவழி
காட்டி ஆதரவு தந்து, இன்பமுடன்
வாழ வைத்து இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட எமது குடும்பத்
தலைவரின் திருப் பாதங்களுக்கு
காணிக்கையாக இம்
மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

— குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு'



அமரர்

## சின்னத்தம்பி ஆறுமுகம் கணபதிப்பிள்ளை
அவர்கள்

அன்னையின் மடியில்;
1936 - 07 - 16

அம்பிகை அடியில்;
1999 - 05 - 19

## திதி நிருணய வெண்பா

ஆண்டு பிரமாதி வைகாசி ஐந்து புதன்
பூண்டதொரு பூர்வபக்க பஞ்சமியில் — நீண்ட புகழ்
கணபதிப் பிள்ளையிவர் காக்குமருள் நாகம்மைக்
குணநிதியின் தாளடைந்தார் கூறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நயினாதீவு,

# அமரர் திரு. கணபதிப்பிள்ளை

அவர்களின்

# வாழ்வும் வரலாறும்

ஈழமணித் திருநாட்டின் வடபால் இருக்கும் சப்த தீவுகளில் நடுநாயகமாக விளங்கும் மணிபல்லவம் என்னும் புகழ்பூத்த நயினாதீவில் ஆறுமுகம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரராக 1936 ம் ஆண்டு ஆடி மாதம் 16 திகதி ஆறுமுகம் கணபதிப்பிள்ளை பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயத்தில் கற்று தனது 6 ம் வகுப்பு படிப்பை முடித்துக் கொண்டு கொழும்பு 5ம் குறுக்குத் தெருவிலுள்ள V.P.N நிறுவனத்தில் வியாபாரத் துறையில் காட்டிய திறமையாலும் நம்பிக்கை நாணயத்தினாலும் தொடர்ந்து இருபது வருடங்கள் அங்கே கடமை புரிந்தார்.

இருபத்தெட்டாவது வயதில் நயினாதீவில் பிரபல்யம் பெற்று விளங்கிய காசிப்பிள்ளை இராமலிங்கம் - நல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியாகிய கனகம்மாவை திருமணம் செய்து இல்லற வாழ்வில் இனிதே வாழ்ந்து வந்தார் இவர்கள் இருவரும் செய்த தவப் பயனின் காரணமாக இவர்களுக்கு தவஈஸ்வரி, கேசவராணி, கேதீஸ்வரன் பாலேஸ்வரன் ஆகியோர் பிள்ளைகளாக வாய்க்கப் பெற்றனர். பிள்ளைகளது கல்வி வளர்ச்சியிலும், உயர்ச்சியிலுமே கண்ணாய் இருந்து இல்லற வாழ்வில் இன்புற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பிள்ளைகள் இருவருக்கும் உரிய காலத்திலே திருமணம் செய்து உவகை கொண்டனர். மருமக்களாக மகேஸ்வரன், தியாகேசன், ஆகியோரை அடையப்பெற்று அவர்களின் அன்புக்கும் பாசத்திற்கும் உரிய மாமனாராகவும் ஷாலினிக் குட்டியின் பேரன்புக்குரிய பேரனாகவும் திகழ்ந்தார்.

இவருடன் உடன் பிறந்தவர்களாக சோமசுந்தரம்,கிருஷ்ணசாமி, சங்கரலிங்கம், தருமலிங்கம், தங்கம்மா, மனோன்மணிசெல்லம்மா, பராசக்தி, கமலாம்பிகை ஆகியோரும் மனைவி வழி மைத்துனர்களாக சண்முகலிங்கம், கணேசலிங்கம், மங்கையற்கரசி, புவனேஸ்வரி, சிவகாமசுந்தரி ஆகியோரும் அன்புக்கும், பாசத்திற்கும் உரியவர்களாக விளங்கினர்.

இவர் தனது மனைவியாருக்கு வந்த கடும் சுகவீனங்களையெல்லாம் தானே சுமந்து கொண்டு பலவித கஷ்டங்களையும் சமாளித்துக் கொண்டு வாழ்ந்து விளங்கினர்.

இவர் பிடாரி அம்பாள் ஆலய உற்சவம் நெருங்கிய நேரம் இவருக்கு கடுமையான மாரடைப்பு வந்து நயினாதீவு அரசினர் வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு முன்பே இவ்வுலக வாழ்வை நீத்தார்.

பிள்ளைகள் சுவிஸ் நாட்டிலும், இத்தாலியிலும் வாழ்ந்து கொண்டு அப்பாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள முடியவில்லையே என்று தவியாய்த் துடிக்கின்றனர்.

இவர் வாழ்விலும் சாவிலும் வணங்கிய எம் இரு குல தெய்வங்களையும் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

—குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கண்ணீர் அஞ்சலி மடல்

அன்பின் திரு உருவே ! ஆற்றலில் சிறந்தவரே !
இன்னல்களை களைந்தெறிந்தீர்களே !
ஈகையில் சிறந்தீர்களே அண்ணா!!

கள்ளமில்லா புன்சிரிப்பும் கனிவான பார்வையும்
காட்டும் கனிவுடன் வரவேற்று அன்பும்
பண்பும் அறிவும் புகட்டி பாரினிலே
எல்லோரையும் நல்லவராக்கினீர்களே!

பிள்ளைகளின் ''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' என்ற வாக்குப்படி வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தீர்கள். அவர்கள் திரும்ப வந்து பார்க்க முன்னரே மறைந்து விட்டீர்களே!

காலநேரம் நெருங்கியது. காலனும் கவர்ந்து சென்றான். உடன் பிறந்த சகோதரர்களும், பிரியமான மனைவியும், பெற்ற பிள்ளைகளும், உற்றார் உறவினர்களும், சோகமேயுருவாக வாடுகிறார்கள்.

அண்ணாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிகின்றோம்.

துயர வெள்ளத்தில் துயருறும்.
தம்பி குடும்பத்தினர்.
சி. ஆ. தருமலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## கண்ணீர் அஞ்சலி

அன்புள்ள அப்பாவே!
காலமெல்லாம் எம்மைக் காத்து கனிவுடனே மொழி பேசி
கற்க கசடறக் கற்க வழிகள் பல சமைத்து
நிற்க அதற்கு தக என வேண்டி நின்றீர்
அப்பா! எம்மை விட்டு எங்கு சென்றீர்
கணக்கு முடித்தானா? காலன் எமைக் கலங்கவைத்து
தனக்கெனவே உமையழைத்த தருமம் தான் என்ன?
இறுதி மூச்சு விடும் வேளை பேச்சுக்குள் மூச்சாக
மறைந்திருந்த அம்மாவோ உயிராக உறைந்திருந்தாள்
அவை அகக்கண்ணால் நோக்கி ஆறுதல் பெற்றீரோ?
ஆண்டவனே எங்களுக்கு ஆறுதலைத் தாருமையா!
அப்பா எம்மைவிட்டு எங்குதான் சென்றீர்கள்!!

**துன்ப வெள்ளத்தில் துயரும் பிள்ளைகள்.**
ஈஸ்வரி, ராணி, வரன், பாலா

## மலர் அஞ்சலி

எங்கள் அன்புள்ள மாமா!
பாசமிகு மாமாவே! நீங்கள் தெய்வமாகிவிட்ட
செய்தியால் நாங்கள் இங்கு
துன்பத் துயரில் துடிக்கிறோம்.
உங்கள் அன்பு உருவத்தைக் காண முடியவில்லையே
இனி நாங்கள் யாரிடம் வந்து ஆறுதலடைவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நித்த நித்தம் அம்பிகையை
நினைத்து வணங்குகின்றோம்.

**உங்கள் பிரிவு தாங்கமுடியாமல் தவிக்கும்.**
**மருமக்கள்**
மகேஸ், தியாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கண்ணீர் அஞ்சலி

அமரர் உயர்திரு சின்னத்தம்பி **ஆறுமுகம்** கணபதிப்பிள்ளை அவர்கள் எமது குடும்பத்தில் இரண்டாவது அக்காவைத் திருமணம் செய்தும் எமது குடும்பத்தில் தலைமருமகனாகவும் குடும்ப ஒளி விளக்காகவும் திகழ்ந்தவர், எந்தக் காரியத்திலும் சலியாத மனமும் உறுதிப்பாடும் உடையவர்.

எனது அக்காவின் கணவனாகவும் அவவின் நோய் நொடிகளில் வைத்தியனாகவும், பணிவிடையாளனாகவும் விளங்கியவர். எல்லா மக்களாலும் நல்லவர் என்ற திருநாமத்தைப் பெற்றவர்

அவரும் அவர் துணைவியாரும் அவர்களின் விடா முயற்சியால் " ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் உழை " என்ற வள்ளுவப் பெருந்தகையின் திருவாக்கிற்கு அமைய கல்விச் செல்வமும், பொருட் செல்வமும் அவர்களின் வீடு நோக்கி வந்தமை பெருமைக்குரியது. அவர்களது நான்கு பிள்ளைகளும், இரு மருமக்களும் கல்வி நிலையிலும் செல்வத்திலும் சிறந்து விளங்குகின்றனர் இரண்டாவது பிள்ளை தந்தையின் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு இறந்து ஐந்தாம் நாளே இத்தாலியில் இருந்து வந்து செயலாற்றியது அன்னாரின் ஆத்மீக கொடையாகவே அமைந்து விட்டது.

அன்னாரின் ஆத்மா " செல்லும் தவ நெறியும் சிவலோகமும் சித்திக்குமே " என்ற சுவாமிகள் அபிராமிப்பட்டர் வாக்குக்கமைய நீடூரென அம்பிகையின் பாதார விந்தங்களை அடைந்து விட்டது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புக்குரிய மைத்துனர்.
கா. இ. சண்முகலிங்கம்

" வாணிபவன் "
நயினாதீவு - 5.

சாந்தி ஐயாத்துரை சரவணபவன்
இலங்கை கல்வி நிருவாக சேவை
ஸ்ரீலக்ஷ்மி ஒழுங்கை
கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பன்னிரு திருமுறைகள்

## தேவாரம்

### முதலாம் திருமுறை

திருஞானசம்பந்தர்

திருவையாறு

பண் :-மேகராகக் குறிஞ்சி

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம் மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செவா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

### இரண்டாம் திருமுறை

திருஞானசம்பந்தர்

திருச்சாய்க்காடு

பண் :-சீகாமரம்

நீநாளு நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ட
நாநாளு நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் திருமுறை

திருஞானசம்பந்தர்

திருவாவடுதுறை

பண் :- காந்தார பஞ்சமம்

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினுமுனகழல் விடுவே னல்வேன்
றாழிளந் தடம்புன றயங்கு சென்னி
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

## நாலாம் திருமுறை

திருஞானசம்பந்தர்

திருவதிகை வீரட்டானம்

பண் :-கொல்லி

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம் இது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந் தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீட்டானந் துறை அம்மானே.

## ஐந்தாம் திருமுறை

திருநாவுக்கரசர்

திருநாகேச்சரம்

நாவ லம்பெருந் தீவினில் வாழ்பவர்
மேவி வந்து வணங்கி வினையொடு
பாவ மாயின பற்றறு வித்திடும்
தேவர் போல்திரு நாகேச் சரவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் திருமுறை

திருநாவுக்கரசர்

புக்கதிருத்தாண்டகம்

கோயில்

இறந்தார்க்கு மென்று மிறவாதார்க்கு
மிமையவர்க்கு மேகமாய் நின்றுசென்று
பிறந்தார்க்கு மென்றும் பிறவாதார்க்கும்
பெரியான்றன் பெருமையே பேசிநின்று
மறந்தார்மனத் தென்று மருவார் போலும்
மறைக்காட் டுறையு மழுவாட் செல்வர்
புறந்தாழ்சடை தாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.

## ஏழாந் திருமுறை

சுந்தரமூர்த்தி நாயனார்

திருப்புன்கூர் பண் :- தக்கேசி

இயக்கர் கின்னரர் யமனொடு வருணன்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.

# திருவாசகம்

## எட்டாந் திருமுறை

மாணிக்கவாசகர்

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவார்த்தைக் காக்கியெம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே

## திருவிசைப்பா

ஒம்பதாந் திருமுறை கருவூர்த்தேவர்

சங்கை கொண்ட சோளேச்சரம்

உண்ணெகிழ்ந் துடல நெக்குமுக் கண்ணா
ஓலமென் றோலமிட் டொருநாள்
மண்ணினின் றலறேன் வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேற்
பண்ணிநின் றுருகேன் பணிசெயே னெனினும்
பாவியே னாவியுள் புகுந்தென்
கண்ணினின் றகலான் என்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

## திருமந்திரம்

பத்தாம் திருமுறை திருமூலர்

பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பில ராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே



சுவாமி ஐயாத்துரை சரவணமுத்து
இலங்கை சைவ திருவாக சேவை
ஸ்ரீலக்ஸ்மி உடையார் இலுப்பை
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினொராந் திருமுறை

### விநாயகர் திருவிரட்டை மணிமாலை

நம்பியாண்டார் நம்பி

என்னை நினைத்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் —புன்னை
விரசுமகிழ் சோலைவிய னரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்.

## பன்னிரண்டாம் திருமுறை

சேக்கிழார்

# திருப்புராணம்

இறவாத வின்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் அடியின்கீ ழிருக்க வென்றார்.

## அபிராமி அந்தாதி

அபிராமிப்பட்டர்

அரணம் பொருளென்று அருளொன் றிலாத அசுரர் தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே.
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை மான்மியம் வரகவி - க. நாகமணிப்புலவர்

பெற்றதா லன்னை பெறுமுயி ரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிடுவோ
ருற்றதா லன்னை விரும்பிய வனைத்து
முதவலா லன்னை யெக்கலையுஞ்
சொற்றதா லன்னை யுலகொடு வானுந்
தொழுதலா லன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலா லன்னை
பராபரை நாக பூஷணியால்.

# திருப்புகழ்

அருணகிரிநாதர்

இருவினைக ளீட்டு மிழவுபடு கூட்டை
யெடுமெடென வீட்டி லனைவோரும்
இறுதியிடு காட்டி லழுதுதலை மாட்டி
யெரியெரி மூட்டி விடுமாறு
கரிய இரு கோட்டு முரணெருமை மோட்டர்
கயிறிறுக மாட்டி யழையாமுன்
கனகமணி வாட்டு மருவுகழல் பூட்டு
கழலிணைகள் காட்டி யருள்வாயே
பருவமலை நாட்டு மருவுகிளி யோட்டு
பழையகுற வாட்டி மணவாளா
பகைஞர் படை வீட்டில் முதியகன லூட்டு
பகருநுதல் நாட்ட குமரேசா
அருமறைகள் கூட்டி யுரைசெய்தமிழ் பாட்டை
அடைவடைவு கேட்ட முருகோனே
அலைகடலி லீட்ட அவுணர் தமை யோட்டி
அமரர்சிறை மீட்ட பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

மழைவ ழங்குக; மன்னவன் ஓங்குக;
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக;
தழைக அஞ்செழுத் ( து ) ஓசை தரையெல்லாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே
— கோயிற் புராணம்

வான்முகில் வழாது பெய்க; மலிவளம்
சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க. குறைவிலா ( து )
உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க. நற்றவம் வேள்வி
மல்க.
மேன்மைகொள்சைவநீதி விளங்குக உலக
மெல்லாம்.
— கந்தபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ கைலாயம் போற்றித் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர்

1. பொறையுடைய பூமீநீ ரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

2. முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கணியே போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக வெங்கு மணிந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

3. மாலை யெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலை வினைக ளறுப்பாய் போற்றி
மேலோடு திங்கண் முடியாய் போற்றி
பாலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உடலின் வினைக ளறுப்பாய் போற்றி
ஒள்ளொளி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேன் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரிற் றிகழ்கின்ற சோதி போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலி லொளியாய் முந்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

5. மைசேர்ந்த கண்ட முடையாய் போற்றி
மாலுக்கு மோராழி யீந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகுதாய் போற்றி
போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ றாடி போற்றி
மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசேர் அனலேந்தி யாடி போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

6. ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போன்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமை யேழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அண்ட மேழன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
பேரோர் விண்ணேத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவு மிடத்தாய் போற்றி
தொழு னோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

8. பெருகி யலைக்கின்ற வாறே போற்றி
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
உருகி நினைவார்தம் உள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
ஆரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிதோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

9. செய்யமலர் மேலான் கண்ணன் போற்றி
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யா நஞ்சுண்ட பொறையே போற்றி
பொருளாக வென்னையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக வானஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்தும் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

10. மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமுன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றி
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் றன்னையன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாரூர் போற்றித் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர்

1. கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்று மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி

2. வங்கமலி கடனஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரு நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கடம் இறைவா போற்றி
ஆலமா நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி.

3. மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமே லொற்றைக்கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தி போற்றி
ஏழ்கடலு மேழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொன்னியலு மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னிய சீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேறு கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி.

5. நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாடலு கந்தாய் போற்றி
தூநீறு மெய்க் கணிந்த சோதி போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி

6. சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங்காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி.

7. வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நான்வேத மாறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி.

8. உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்று நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் றோடுணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கு மேலோர்க்கு மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி.

9. பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி.

10. பிரமன்தன் சிரமெரித்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கு முக்கண்ணு முடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற வெளியாய் போற்றி
அருமந்தத் தேவர்க் கரசே போற்றி
அன்றரக்க னைந்நான்கு தோளுந்தாளுஞ்
சிரநெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலத் தானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ கயிலாயம் - போற்றித் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர்

1\. வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

2\. பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாட லன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சித்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

3\. மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வானத்தார் போற்று மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி யழலாய் நிமிர்ந்தாயே் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத் தீயாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

5. ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி யழலாய் நிமிந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

6. சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறு நிற்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதான் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போய்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணு நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்ற ய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

8. இமையா துயிரா யிருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழி யேழான ஒருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

9. மூவாய் பிறவா யிறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவாடி யேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் லியவலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நெடிய விசும்போடு கண்ணே போற்றி
நீள வகல முடையாய் போற்றி
அடியு முடியு மிகலி போற்றியங் கொன்
றறியாம னின்றாய் போற்றி
கொடியவன் கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலா வென்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய வுருவமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

11. உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் றன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின் சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீகைலாயத் திருமலை

போற்றித் திருத்தாண்டகம்

1. பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசையறி யாம னின்றாய் போற்றி
சூட்டான திங்கண் முடியாய் போற்றி
தூமாலை மத்த மணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சும மமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

2. அதிரா வினைக ளறுப்பாய் போற்றி
ஆல நிழற் கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பன் மெய்பூசுந் தலைவா போற்றி
எதிரா வுலகம மைப்பாய் போற்றி
என்று மீளா வருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

3. செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வ முடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாச வண்ண முடையாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியா யணியாய் போற்றி
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் கழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

4. ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அடியார்க் கமுதமெலா மீவாய் போற்றி
சூட்சி சிறிது மிலதாய் போற்றி
சூழ்ந்த கட னஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிது முடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

5. முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
ஏழி னிசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமும் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6. உரியா யுலகினுக் கெல்லாம் போற்றி
உணர்வென்று மூர்வ துடையாய் போற்றி
பெரியாய் தெய்வச் சுடரே போற்றி
பேசுமா முண்டி யுடையாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாய் அமரர்கட் கெல்லாம் போற்றி
அறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

7. எண்மேலு மெண்ண முடையாய் போற்றி
ஏறறிய வேறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி
பண்ணொடி யாழ்வீணை பயின்றாய் போற்றி
விண்மேலு மேலு நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கண் மேலார்கண் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொன் றுடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

8. முடியார் சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தி போற்றி
துடியாரிடை யுமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியா ரடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள் வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்று மெய்த்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

9. போற்றிசைத் துன்னடி பரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி
எண்ணா யிரநாறு பேராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான் முகற்கு மாற்கு மறியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௳

# திருவீரட்டானம் போற்றித் திருத்தாண்டகம்

*திருநாவுக்கரசர்*

1. எல்லாருஞ் சிவனென்ன நின்றாய் போற்றி
   எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
   கொல்லுங் கூற்றொன்றை உதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக்கரியாய் போற்றி
   கற்றாரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரண மெய்தாய் போற்றி
   வீரட்டங் காதல் விமலா போற்றி.

2. பாட்டுக்கு மாட்டுக்கும் பண்பா போற்றி
   பல்லூழியாய்ப் படைத்தாய் போற்றி
ஓட்டகத்தே யூணாவுகந்தாய் போற்றி
   உள்ளுவார் உள்ளத் துறைவாய் போற்றி
காட்டகத்தே ஆடல் மகிழ்ந்தாய் போற்றி
   கார்மேக மன்ன மிடற்றாய் போற்றி
ஆட்டுவதோர் நாக மசைத்தாய் போற்றி
   அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

3. முல்லையங் கண்ணி முடியாய் போற்றி
   முழுநீறு பூசிய மூர்த்தி போற்றி
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி
   ஏழ்நரம்பி னோசை படைத்தாய் போற்றி
சில்லைச் சிரைத்தலையி லூணாய் போற்றி
   சென்றடைந்தார் தீவினைக டீர்ப்பாய் போற்றி
தில்லைச் சிற்றம்பல மேயாய் போற்றி
   திருவீரட்டானத்தெஞ் செல்வா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சாம்ப லகலத் தணிந்தாய் போற்றி
தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி
கூம்பித் தொழுவார்தங் குற்றே வலைக்
குறிக்கொண் டிருக்குங் குழகா போற்றி
பாம்பு மதியும் புனலுந் தம்மிற்
பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி
ஆம்பல் மலர்கொண் டணிந்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

5. நீறேறு நீல மிடற்றாய் போற்றி
நிழறிகழும் வெண்மழுவாள் வைத்தாய் போற்றி
கூறேறு மையொருபாற் கொண்டாய் போற்றி
கோளரவ மாட்டுங் குழகா போற்றி
ஆறேறு சென்னி உடையாய் போற்றி
அடியவர்கட் காரமுத மானாய் போற்றி
ஏறேற வென்று முகப்பாய் போற்றி
இருங்கெடில வீரட்டத் தெந்தாய் போற்றி.

6. பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
பழையாற்றுப் பட்டீச் சுரத்தாய் போற்றி
வீடுவார் வீடருள வல்லாய் போற்றி
வேழத் துரிவெருவப் போர்த்தாய்
நாடுவார் நாடற் கரியாய் போற்றி
நாக மரைக்கசைத்த நம்பா போற்றி
ஆடுமா றைந்து முகப்பாய் போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

7. மண்துளங்க வாடல் மகிழ்ந்தாய் போற்றி
மாக்கடலு மால்விசும்பு மானாய் போற்றி
விண்துளங்க மும்மதிலு மெய்தாய் போற்றி
வேழத் துரிமூடும் விகிர்தா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டுளங்க பாடல் பயின்றாய் போற்றி
பார்முழுது மாய பரமா போற்றி
கண்டுளங்கக் காமனைமுன் காய்ந்தாய் போற்றி
கார்க்கெடிலங் கொண்ட கபாலி போற்றி

8. வெஞ்சின வெள்ளேற்றி உடையாய் போற்றி
விரிசடைமேல் வெள்ளம் படைத்தாய் போற்றி
துஞ்சாப் பலிதேருந் தோன்றல் போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
நஞ்சொடுங் கண்டத்து நாதா போற்றி
நான்மறை யோ டாறங்க மானாய் போற்றி
அஞ்சொலாள் பாக மமர்ந்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

9. சிந்தையாய் நின்ற சிவனே போற்றி
சீர்ப்பதஞ் சிந்தை செய்தாய் போற்றி
புந்தியாய்ப் புண்டரீகத் துள்ளாய் போற்றி
புண்ணியனே போற்றி புனிதா போற்றி
சந்தியாய் நின்ற சதுரா போற்றி
தத்துவனே போற்றியென் றாதாய் போற்றி
அந்தியாய் நின்ற அரனே போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி

10 முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றியென் றாதாய் போற்றி
தொக்கணா வென்றிருவர் தோள்கை கூப்பத்
துளங்கா தெரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணுங் கண்ணிலே னெந்தாய் போற்றி
எறிகெடில வீரட்டத் தீசா போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் அருளிய திருமந்திரம்

1. அன்புட னேநின் றமுதமும் ஏற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதொறுந்
துன்பம் அகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந் தெய்திடும் முத்தியே.

2. நல்லொளி யாக நடந்துல கெங்கும்
கல்லொளி யாகக் கலந்துள் இருந்திடும்
சொல்லொளி யாகத் தொடர்ந்த உயிர்க்கெலாம்
கல்லொளி கண்ணுளு மாகிநின் றாளே.

3. திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே.

4. நல்குந் திரிபுரை நாதநா தாந்தங்கள்
பல்கும் பரவிந்து பாரண்ட மானவை
நல்கும் பரைஅபி ராமி அகோசரி
புல்கு மருளுமப் போதந்தந் தாளுமே.

5. நின்ற திரிபுரை நீளும் புராதனி
குன்றவில் யோகினி மாதிருக் குஞ்சிகை
நன்றறி கண்டிகை நாற்காற் கரீடணி
துன்றிய நற்சுத்த தாமரைச் சுத்தையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அவளை யறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி ஊர்புகு மாறறி யேனே.

7. போகஞ்செய் சத்தி புரிகுழ லாளொடும்
பாகஞ்செய் தாங்கே பராசத்தி யாய்நிற்கும்
ஆகஞ்செய் தாங்கே அடியவர் நாள்தொறும்
பாகஞ்செய் ஞானம் படர்கின்ற கொம்பே.

8. கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியை
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பியென் உள்ளே நயந்துவைத் தேனே.

9. தலைவி தடமுலை மேல்நின்ற தையல்
தொலைவில் தவஞ்செயுந் துய்நெறித் தோகை
கலைபல வென்றிடுங் கன்னியென் உள்ளம்
நிலைபெற இங்கே நிறைந்துநின் றாளே.

10 நின்றவள் நேரிழை நீள்கலை யோடுற
என்றன் அகம்படிந் தேழுல குந்தொழ
மன்றது வொன்றி மனோன்மணி மங்கலி
ஒன்றெனோ டொன்றிநின் றொத்தடைந் தாளே.

11. அளியொத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி
புளியுறு புன்பழம் போலுள்ளே நோக்கித்
தெளியுறு வித்துச் சிவகதி காட்டி
ஒளியுற வைத்தென்னை உய்யவுண் டாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. நின்றா ளவன்தன் உடலும் உயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி
ஒன்றாக என்னுட் புகுந்துணர் வாகியே
நின்றாள் பரஞ்சுடர் ஏடங்கை யாளே

13. ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண் தாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே.

14. தோத்திரஞ் செய்து தொழுது துணையடி
வாய்த்திட ஏத்தி வழிபடு மாறிரும்
பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்
பார்த்திடும் பூம்பிள்ளை யாருமாம் ஆதிக்கே.

15 வேயன தோளி விரையுறு மென்மலர்
ஏய குழலி இளம்பிறை ஏந்திழை
தூய சடைமுடிச் சூலினி சுந்தரி
ஏயென துள்ளத் தினிதிருந் தாளே.

16. அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போன்றுவார்க்
கின்சொல் அளிக்கும் இறைவியென் றாரே.

17. ஆவின் கிழத்திநல் லாவடு தண்டுறை
நாவின் கிழத்தி நலம்புகழ்ந் தேத்திடுந்
தேவின் கிழ்த்தி திருவாஞ் சிவமங்கை
மேவுங் கிழத்தி வினைகடிந் தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. போற்றியென் பேன்புவ னாபதி அம்மையென்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை
சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை
கூற்றந் துரக்கின்ற கொள்கைந் தொடியே.

19. தொடியார் தடக்கைச் சுகோதய சுந்தரி
வடிவார் திரிபுரை யாமங்கை கங்கைச்
செடியார் வினைகெடச் சேர்வரை என்றென்
றடியார் 'வினைகெடுந் தாதியு மாமே.

20. அம்பன்ன கன்னி அரிவை மனோன்மனி
கொம்பன்ன நுண்ணிடை கோதை குலாவிய
செம்பொன்செய் யாக்கை செறிகமழ் நாடொறும்
நம்பனை நோக்கி நவிலுகின் றாளே.

21. பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர்
சீரொளி யாகித் திகழ்தரு நாயகி
காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம்
பாரொளி யாகிப் பரந்துநின் றாளே.

22. மணிமுடி பாதஞ் சிலம்பணி மங்கை
அணிபவ ளன்றி யருளில்லை யாருந்
தணிபவர் நெஞ்சினுள் தன்னரு ளாகிப்
பணிபவர்க் கன்றோ பரகதி யாமே.

23. நாவுக்கு நாயகி நன்மணி பூணாரம்
பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாம்
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தள்
ஆவுக்கு நாயகி அங்கமர்ந் தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு
தொடர்ந்தணி முத்து பவளங்கச் சாகப்
படர்ந்தல்குற் பட்டாடை பாதஞ் சிலம்பு
மடந்தை சிறியவள் வந்துநின் றாளே.

25. நன்மணி சூலம் கபாலங் கிளியுடன்
பன்மணி நாகம் மழுகத்தி பந்தாகுங்
கன்மணி தாமரை கையில் தமருகம்
பொன்மணி பூணாரம் பூசனை யானதே

26. பொற்கொடி யாளுடைப் பூசனை செய்திட
அக்களி யாகிய ஆங்காரம் போயிடும்
மற்கட மாகிய மண்டலந் தன்னுளே
பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே.

27. இறப்பும் பிறப்பும் இருமையும் நீங்கித்
துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை
மறப்பில ராய் நித்தம் வாய்மொழி வார்கட்
கறப்பதி காட்டும் அமரர் பிரானே.

28. பிறந்தும் இறந்தும்பல் பேதைமை யாலே
மறந்து மலஇருள் நீங்க மறைந்து
சிறந்த சிவனருள் சேர்பரு வத்துத்
துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே.

29. அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரானும்
இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்
சிவன்றான் பலபல சீவனு மாகும்
நயன்றான் வரும்வழி நாமறி யோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே.

30. பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பில ராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நயினை ஸ்ரீ நாகாம்பிகை அந்தாதி

— நயினை இராகுலன் —

## காப்பு

நந்தாத வரமருளும் நயினைநா காம்பிகைபா
லந்தாதி பாடுதற்கு ஆவலுறுஞ் சிறியேனின்
சிந்தா குலமகற்றுஞ் செம்மணத்தம் புலமமரும்
தந்திமா முகத்தினானே வந்திடா யெந்தன்முன்னே.

## நூல்

சற்பக தருவென்றும்மைக் கண்டவர் வியந்து ஏத்தும்
அற்புத வருளுளாளே அன்னையே நாமமன்றுன
பொற்பதம் போற்ற நாக பூஷணி நாகமன்று
பெற்றனை தாயே யுந்தன் பிள்ளையான் இரங்குவாயே. 1

இரங்கிடு மடியா ருள்ளத் திருந்திடு முனையே ஞானம்
கரந்திடும் நயினைத் தாயே சோதியே சுடரே யெந்தன்
கரங்களைச் சிரமேற் கூப்பி கண்களில் நீரைத் தாங்க
வரந்தர வேண்டும் தாயே வற்றிடாக் கருணைக் கடலே. 2

கடல்கடந் தடியாருந் நன் சமலடி போற்றி செய்ய
இடர்களைந் தின்பமோங்க வின்னருள் புரியுந் தேவி
விடந்தனை யுண்டு தேவர் விதிபினை வென்ற பரமன்
இடந்தனி லமர்ந்து கொண்ட ஈஸ்வரி! நயினைத் தாயே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயென வுன்னை நம்பித் தஞ்சமென் றடைவோர் தம்மை
சேயென வணைந்துக் கருணைத் தேனினைச் சுரக்கு மன்னை
நீயென வுணர்ந்து கொண்டே நித்தமுன் பாதம் வேண்டும்
நாயெனை யாண்டு கொண்டே நல்லருள் தருவாய் சோதி. 4

சோதியுன் பாத மேத்தித் துதிசெயும் நோக்க மோடே
ஆதியில் நாக மொன்று அனலையி லிருந்து வந்து
பாதியில் கருடன் சூழ பாம்பொரு கல்லில் சுற்ற
வாதினைத் தீர்த்த வணிகன் வளம்பல சேரப் பெற்றே. 5

பெற்றநல் வளங்க ளெல்லாம் பெரியதோர் கோயிலாக்கும்
நற்றவப் பணிக்கே மாற்றி மாநா யக்கன் ஈய
கற்றலம் வாய்க்கப் பெற்ற காரிகை நயினை யாளே
வற்றிடாப் பெருங் கடலே வளர் நாக உருவே. 6

உருவளர் நாக முந்தன் உயர்வினை யெடுத் துரைக்கக்
கருடனும் பாம்புக் கல்லும் கதையினைச் சொல்ல நாளும்
திருவருள் சுரக்கும் நாக பூஷணி நயினைத் தீவின்
அருங்கொடை நீதா னம்மா அடியெனைக் காத்திடம்மா. 7

காத்தெமை யாளு மானே கரும்பினு மினிய தேனே
மாத்திரைப் போது முந்தன் மலரடி தஞ்ச மென்றே
ஏத்துவா ரின்னல் தீர்க்கும் ஏழ்கட லிலங்கு முத்தே
பாத்திற முடையோர் நாவில் பார்வதி யருளும் வந்தே.

வந்தெமை யாளும் தேவி வற்றிடாப் பெரு வரங்கள்
தந்தெமை யரவணைப்பாய் சங்கரன் பங்கினாளே
சிந்தையி லமைதி யோங்கச் செந்தமிழ் சிறந்து வாழ
முந்தைய வினைகள் போக முந்திதா சிவனார் சக்தி 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திமா தவங்கள் செய்து சங்கரன் பாக மாக
அத்திமா முகனு மாறு முகனுமே யவ தரிக்கச்
சித்திமா வெட்டு நல்கிச் சிவனொடு சேர்ந்து நின்றே
கத்துமா கடல்சூழ் நயினைக் கண்மணி காவலாமே. 10

காவலென் றுன்னை நம்பிக் கழலடி தொழுவோருக்கு
ஆவலா யருளைப் பொழிபு மம்பிகை யுன்புகழை
நாவலா நயமாய்ப் பேச நற்றமிழ் தருவ தற்காய்
பாவலர் நாவில் வந்து பதிந்திடாய் நயினையாளே. 11

நயினையின் கண்ணே நாகம் நர்த்தன மாடும் பெண்ணே
எயில்கள்மூன் றெரிக்கவன்று ஈசனுக் கருளை யீந்த
கயிலைமா மலையுளாளே கத்துமேழ் கடலில் நீங்கா
மயிலனை மாதே மாந்தர் மனத்திருள் வாட்டுவாயே. 12

வாட்டமுற் றடியாருந்தன் வாசலில் வந்து நின்று
கேட்டிடும் வரங்களியும் கீர்த்திசேர் நயினை வாழும்
பாட்டுடைத் தலைவிநீயே பாம்பினைச் சென்னி மேலே
சூட்டிய சோதிநீயே தூயமா மணிபி னாளே. 13

மணியாய் மணிபல்லவத்தி னொளியாய் விளங்கு நாக
அணியா ளன்னையினு மினியா ளிளங் கிளியாள்
தணியாத அருள்கொண்டு தலம்வந்து கரம் கூப்பிப்
பணிவார்க ளிடர்போக்கும் பரணிடப் பாகத்தாளே. 14

பாகமாய்ப் பரமனோடு பரந்தெழுந் தருள் பொழியும்
நாகவா சனத்துளாளே நயினைமா நகரு ளாளே
ஏகமாய்ப் பலவாய் நின்று வின்னருள் சுரக்குமீசன்
பாகமாய் ஒன்றுமெங்கள் பார்வதி யருளு மம்மே, 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையே அப்பாவென்று அழைத்த சம் பந்தருக்கு
செம்மையாய் ஞானப் பாலைச் சுரந்துமே யூட்டி வைத்த
உம்மையே உலகமென்று உணர்த்திய கண பதிக்கு
அம்மையே நயினைவாழும் அடியவர்க் கருளும் அன்னே. 16

அன்னையே யுன்னை யென்று மாதரித் தேத்துமன்பர்
என்னமா தவங்கள் செய்தார் ஈஸ்வரி எம்மைக் காத்து
முன்னைய வினைகள் போக முத்தியும் வந்துகூட
என்னையும் இரட்சிப்பாயே எழில்தவழ் நயினைக்கண்ணே. 17

கண்ணாய் அமுதமுமாய் கரும்பாகிக் கற்கண்டாய் தேனுமாகி
எண்ணாகி எழுத்தாகி ஏழ்கடலாய் ஈரேழு புவனமாகிப்
பண்ணாகிப் பாவாகிப் பதமுமாகிப் பாரினிலே எமைப் பயந்த
பெண்ணாகிப் பெருங் கருணை பொழி நாக பூரணியே. 18

பூரணி புராதனி புங்கவி விளங்கு ஞான போதினி
நாரணி நாயகி நான்முகி நாதரூபிணி நயினை வாசினி
ஆரணி அம்பிகை அமுதினி ஆதிநீ அகிலமாளும்
தாரணி தாட்சாயணி சங்கரி எனப் புகழு மங்கையே. 19

மங்கையை இமவான் தந்த மருந்தினை மாலவன்திருத்
தங்கையைத் தரணியெங்கும் தாயினு மினிதா யேத்தும்
நங்கையை நாடினோர்க்கு நாலெட்டு அறங்க ளீயும்
கங்கையே! கடல்சூழ் தீவின் கலங்கரை விளக்கினாளே. 20

விளக்குநீ ஒளியை வேண்ட விரைந்திடு மடியாருந்தன்
உளத்திலே வந்துறைந்து உன்னருள் ஒன்று சேர
அளத்துநீ ரெழுந்துமேவ அவற்றுளே கயல்கள் பாயும்
வளத்திலே வளரும் நாக வாகினிநல் வாக்கினாளே. 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கினரல் மற்றோ ரெம்மை வாழ்த்திடும் திறமை தந்த
போக்கினை யுடையா யன்னை புவனமீ ரேழை யாளும்
பாக்கியம் வாய்க்கப் பெற்ற பார்வதி யுன்னைப் பாட
நாக்கினில் வந்துதிப்பாய் நால்கடல் நடுவின் முந்தே. 22

முத்துநீ முன்னோ ரேத்தும் முதல்விநீ நயினைத்தீவின்
சொத்துநீ யிருளைப் போக்கும் சோதிநீ யாகையாலே
கத்துமா கடலைத் தாண்டிக் கழலடி வேண்டுவோர்க்கு
சித்துநீ தினமும் செய்யும் சீர்பெறு நாகாம்பிகையே. 23

நாகமொன் றுன்னை யன்று நாடியே பூக்கொணர
ஏகமாய்ப் பலவாய் நின்று இன்னருள் சுரந்தவன்னை
நாகபூ ஷணியே யும்மை நாடிடும் அடியார் நல்ல
போகமும் பெறுவா ரிந்தப் புவியிசை நீடு வாழ்ந்தே. 24

வாழ்ந்திடும் போது மக்கள் மனத்திலே யணுகும் துன்பம்
தாழ்ந்திடச் செய்யு மன்னை தவறுகள் செய்து நரகில்
வீழ்ந்திடா வண்ண மெம்மை விலக்கியே யருள் சுரந்து
ஆழ்ந்தநல் லறிவை யூட்டும் அம்பிகை தாள்கள் போற்றி 25

போற்றிட அன்பருந்தன் பொற்றலம் முன்னே தோன்ற
தேற்றிடும் வண்ணங் காட்டி திருவருள் சுரந்தெம் மனதை
மாற்றிடு மன்னைநாக பூஷணி நாமந் தன்னை
ஏற்றிடு மடியார் என்றும் இன்னருள் பெறுவார் இனிதே 26

இனியவள் ஆனி மாதம் இரதமிசை ஏறி வந்தே
நனியருள் தருவா ளிந்த நானிலம் செழிப்புற் றோங்க
பனிநிறை கங்கை சூடும் பரனிடப் பாக மேவும்
கனியவள் கடலே லாளும் கயிலைமா மலையுளாளே. 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைவளர் இமவான் தந்த மாதுளம் நிறத்துளாளே
அலைகடல் மீது வோங்கு மற்புத வடிவுளாளே
நிலைபெறு சக்திநீயே நித்தில மினிது வாழ
கலைபொலி நயினைத் தீவி. லருளொளி பரப்பும் தேவி. 28

தேவியி ரெட்டுப்பேறும் தேடியுன் வாசல் வந்தே
பாவியேன் பத்தியோடுன் பாதமே போற்றி நின்றேன்
நாவிலே நீயிருந்து நல்வரம் தந்து எந்தன்
ஆவிபோம் போதும் வந்தே அஞ்சலென் றருளுவாயே. 39

ஆள்தரு மன்னைநீதா னகிலமீ தின்னல் நீக்கி
திருவொடு கல்வி வீரம் செகத்திலே யளித்து எம்மை
கருமுதல் கடைநாள் வரையுங் காத்திடு முமையே நாக
உருவளர் கிர்த்திசேரும் ஒளிர்திரு முகத்தினாளே. 30

திருமுகத் தழகுகண்டு திருவடி தஞ்ச மென்றே
உருகிடு மடியாருந்தன் திருவருள் சேரும் போதே
கருகிடும் வினைக ளெல்லாம் கவலைகள் நீறதாக
பெருகிடும் பேறாம் கல்வி பெற்றிடத் துயரம்போமே. 31

துயரெனும் கடலை நீந்திச் சுகமெனுங் கரையைச் சேர
தயவுட னருள்பா லிக்கும் தயாநிதி நாகம்மாளே
கயமுகன் கந்தனோடு காட்சிதந் தெம்மை யாளுஞ்
சுயம்புவாய் நாகம் வாய்த்த சோதியே துணைநீநாளே. 32

துணையெனத் தொடருமன்னை துன்பமுற் றேங்கும் வேளை.
பிணையென வந்தெமது பெருந்துயர் தடுக்க வல்ல
அணையென விளங்குந் தேவி அகிலமீ ரேழி னுள்ளும்
இணையிலாத் தெய்வம் நீயே ஈஸ்வரி யாதியாளே. 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியோ டந்தமில்லா அரும்பெருஞ் சோதி நீயே
பாதியைச் சிவனின்வாம பாகமாய்ப் பெற்ற தாயே
சாதிநச் சரவமேறுஞ் சாம்பவி சம்புத் திவின்
மாதினி மறையோ ரேத்தும் மந்திர வடிவுளாளே. 34

வடிவெனவே வரையரசன் மகளாய்வந் தவதரித்த
பிடியனைய சிறுநடையாள் பேராளா ளுளங் கவரும்
கடிகமழுங் கஸ்தூரிப் பொட்டுடையாள் கனகத்தாளை
அடிநாயேன் தலைமேலே வைத்தென்னை ஆளுவாயே. 35

ஆளுவா யெம்மை யெல்லா மாதரித் தன்பு செய்தே
சூழுமா வினைகள் நீக்கித் துன்பமற் றின்ப மோங்க
நாளுமுன் னாமந் தன்னை நாவினால் உச் சரிக்க
ஏழுமா கடலில்நீங்கா எழில்திக ழிலங்கிழையே. 36

இலங்கிழை வையந் தன்னை இயக்குவை யாதலாலே
இலங்குவை மற்றோர் தெய்வம் ஈடுனக் கில்லையென்று
துலங்கிடும் துர்க்கை நீயே தூயமா மணியே மூல
மலங்கெடுத் தாண்டு கொள்வாய் மால்திருச் சோதரியே. 37

சோதரி திருமாலிற்குத் துணைவிநீ சிவனா ருக்கு
ஆதரித் தன்பு செய்யும் அம்புயத் தாளே யும்மைக்
காதலித் தேத்திக் கண்ணீர் கசிந்திடக் கரங்கள் கூப்ப
சாதலின் போது வந்தெம் சஞ்சலம் தீர்க்கு மானே. 38

மான்நேர் விழியாளும்மை மாநிலத் தோர்க ளெல்லாம்
ஊனினின் றுயிர்தா னேகி உறைந்தநா ளகன்ற பின்னே
வானிலு மிருந்து ஏத்தும் வரைமக ளுமையே மதுரத்
தேனிலு மினியா யெந்தன் தேகியுன் சிந்தையதே. 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையி லுறையுந் தேவே தேவரைக் காத்த கோவை
வந்தனை செய்து பெற்ற மாதுநீ செய் தவந்தால்
மந்தமா முகத்தனோடு மஞ்சைவா கனத்தன் தன்னை
தந்தமா மலையினாளே தாரணி நீயே எழுவாய். 40

எழுவாயாய் நீயிருக்க இங்கு நான் பயனிலையேல்
வழுவாயிப் பிறவிதனில் வாழ்ந்திட்ட நாயேனோ
புழுவாகிப் பிறந்தாலும் புங்கவிநின் பாதமதில்
விழுவேனே எனையாளும் வேதமுதல் வித்தகியே. 41

வித்தகி வித்தைக் கெல்லாம் வித்துநீ விமலனாரின்
பத்தினி பாவந் தீர்க்கும் பார்வதி பாம்பிலேறும்
உத்தமி உந்தன் கோவில் உற்சவம் கண்டபேர்கள்
எத்துணை தவங்கள் செய்தார் ஈரேழு உலகினாளே. 42

உலகெலாங் கோயில் கொண்ட உன்பெயர் நயினாதீவில்
நலமெலாம் நல்கும் நாக பூஷணி நாமம் பூண்டே
மலரடி போற்ற வல்ல மதுரைமீ னாட்சி யாகி
இலங்கிடுந் தாயே யுனக்கு ஈடிணை இல்லைத்தானே 43

இல்லையென் றிரங்குவோர்க்கு இன்னருள் ஈயுமன்னை
தெல்லியில் துர்க்கையாகித் திரு மலையிலே மாதுமையாய்
கல்லையுங் கனியச் செய்யும் கௌரியாங் கேதீச்சரத்தில்
நல்லருள் புரியும் நல்லை வீரமா காளித் தாயே 44

காளியாய்த் தோன்று மன்னை கையிலே வாளுமேந்தி
ஆளியில் அமர்ந்து வந்து மகிடனைச் சங் கரித்த
நாளிதாம் மானம் பூவில் யாமளை அசுரன் தன்னை.
வாளினால் வாழ் வறுத்தே வாழ்வளித் தனளே பின்னே 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னே திரிந்துன் பெரும்புகழ் பாட வெந்தன்
முன்னே வந்திடும் முக்கணீ முகுந்த சோதரி
பொன்னே யனைய மேனியென் றடியா ரேத்தும்
அன்னே புனதிரு வடிக ளென் றஞ்சமுமே. 46

தஞ்சமென் றடைவோருக்கு தாயெனப் பரிவு காட்டும்
மஞ்சரி மணிபல் லவத்தின் மாதென விளங்குந் தேவி
நஞ்சுசேர் நாகத்தாலே நாடெலாம் பெருமை பெற்ற
வஞ்சியென் நெஞ்சினுள்ளே வந்துநீ தங்குவாயே. 47

தங்குவாய் மனதினுள்ளே சஞ்சல மனுகா வண்ணம்
எங்களை யாளுந்தேவி ஈசனார் இடமீ திருக்கும்
மங்கள ரூபிநீயே மன்மதன் தேவி வேண்ட
அங்கவன் ஆவி யீந்த அங்கயற் கண்ணியாளே. 48

கண்ணிழந் திட்டோ ரின்னும் கர்மநோ யுற்றோர் வாழ்வில்
எண்ணிலாத் துன்ப முற்று ஈஸ்வரி யுந்தன் பாதம்
நண்ணியுன் கோவில் வந்து நலமெலாம் நல்குமாறு
பண்ணிய நேர்த்தி யேற்கும் பயிரவி சிவத்திடமே. 46

சிவனிடத் துருவமாகிச் செங்கணான் தங்கை யாகிப்
புவனியீ ரேழும் பூத்த புங்கவி அம்புயத் தாள்
அவனியி லேத்துவோர்கள் அறங்களீ ரெட்டும் பெற்றே
கவலையற் றிங்கு வாழக் கருணைநீ கயிலையாளே. 50

கயிலைவா சனத்தி னுந்தன் காட்சியைக் கண்டு நின்றே
எயில்கள்மூன் றெரித்த ஈசன் ஈடிலாப் பதங்கள் போற்றி
மயிலைவா கனமாய்க் கொண்ட மாதவன் மருகனோடு
துயில்களைந் தின்ப மோங்க தும்பிமா முகனும் வந்தே. 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துமை வணங்குவோர்க்கு வரமெலா மீயு மன்னை
இந்திரன் வழிபட்டேகிப் புவன ஈஸ்வரி நாமஞ் சூட்டி
தந்தவன் செயலினாலால் பதினாறு சக்தி பீடம்
வந்ததோர் நயினாதீவில் வளர்சிவ சக்தி ஓங்க. 52

ஓங்கியே வளரும் நாகம் உலகில்வே றில்லையென்று
நீங்கிடாக் கருத்தையன்று நிலைத்திடச் செய்தான் சிம்மன்
தீங்கெலா மகலவன்று திருவருள் நாளுமிங்கே
தேங்கிடச் செய்யு மன்பா தேவிநின் சேய்களயமோ 53

சேய்களைக் காத்துவெங்கள் தீவினை காய்ப்பதென்றும்
தாய் செயுங் கடமையன்றோ தக்கனின் மகளாயன்று
வாய்த்தனை தாட்சா யணியாய் வற்றிடா வருள் சொரிந்து
நோய் நொடி யேகா தெம்மை நும்பதம் அணைத்திடாயே 54

அணைத்தனை சிவனை வலமாய் அவனருட் திறத்தினாலே
இணைத்தனை பாம்பினோடு ஈரேழு உலக முய்யத்
துணையெனத் தொடரு மன்னை துன்பக்
கணைகளை விலக்குவாயே கற்றவர் போற்றும் தேவே. 55

தேவரைக் காக்கத் திருப்பாற் கடலெழு நஞ்சை யுண்டு
பாவமன் றகலவைத்த பரனிடப் பாகத் தாளுன்
சேவடி போற்றி செய்யத் திரைகடல் தாண்டி வந்து
நாவலந் தீவை நண்ண நலமெலாம் பெருக்குவாயே. 56

பெருகலாந் தவமென் றெண்ணி பின்னையில் லாருமுந்தன்
மருகலில் வந்து நேர்த்தி மகிழ்வுடன் செய்து அருளைப்
பருகிடப் பாவம் போகும் பாழ்வினை யாவும் வேக
வருபிணி யாவும் வாட்டும் வரைமகள் உமையினாளே. 57



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையலா துலகமில்லை உன்னருட் திறத்தினாலே
எமையெலா மாளுமன்னை இமையவ னளித்த இன்பச்
சுமையென விளங்கிச் சாந்தம் தொடாவே செய்யும் சக்தி
உமையுனை வணங்கிச் துன்பம் சுதிர்முன் பனியாய் 58

பனித்திளந் திங்கள் பாம்பு பகீரதி சூடும் பரமன்
கனித்திளந் துவர்வாய் கொண்ட காரிகை பாக மாகித்
தனித்திரா வண்ணம் நீயே தந்திடு மருளினாலே
மனிதரும் முனிவர் யாருப் மகிழ்ந்தனர் புனிதராயே. 59

புனிதராய் வந்துவுன்னைப் போற்றிசெய் யடியாருக்கு
நனிசிறந் தருளையீயும் நாயகி நாக மேலும்
இனியவள் தாயே யுந்தன் ஈடிலாப் பதத்தி லென்னை
கனியவை கருணை யீந்து கயவர்தம் கைப்படாதே. 60

கையிலே குவளை யேந்திக் கங்கையைச் சடையில் வைத்தான்
மெய்யிலே பாதிகொண்ட மெல்லிடை மேனியாளே
தையில்நற் பூசநாளில் நெல்மணி காட்டும் நயினைத்
தெய்வமே யுன்னை யல்லால் தேடிடேன் இங்குநானே 6

நானெனும் அகந்தை தீர்க்கும் நாயகி நாயினேனின்
ஊனுயிர் உடைமை யெல்லாம் உனக்கென ஒதுக்கும் போதே
தேனெனச் சுரந்தருளைத் சேர்த்திடா யுன்னை யென்னில்
நான்மறை போற்றும் அம்மே நயினைவாழ் அஞ்சுகமே. 62

அஞ்சுகமா யெழில் அழகுடையாள் அரன் அருகிருப்பாள்
விஞ்சிடவே யருள் தந்திடவே வினை வேரறுப்பாளெம்
நெஞ்சினிலே நிலை பெற்றிடுவா ளடி நிதம் பரவ
பஞ்செனவே துயர் மறந்திடுமே சவள் பரம்பொருளே. 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருளின் பெரும்புகழைப் பாடிப் பணிவதற்கே
இரும்பு மன முடையேனை இழக்கி யருள் செய்தெனக்கு
கரும்புதரு சுவையதனைக் காட்டினையுன் கழலடியே
விரும் நினைந் தொழு மெனக்கு வித்தை தயருள் விழி யெழிலே. 64

எழிலாரும் வேப்பமரச் சோலையதி லிருந்தருளும்
அழியாத கன்னிகையுன் அருள்நாடி வருபவர்க்கு
விழியாலே யருள்பொழியும் வித்தகியுன் பாதமதை
வழிபாடு செயுமடியார் வல்வினையைப் போக்குவாயே. 65

போக்குவாய் வினைகளெல்லாம் பொடிபடச் செய்துவெம்மைனத்
தூக்குவாய் துயரக் கடலில் துன்புறும் போது வந்தே
காக்குமெம் கடவுள்நீயே கயிலயங் கிரியடையப்
பாக்கியம் செய்தாயன்றே பரனிடஞ் சேர்வதற்கே. 66

சேர்ந்தனை சிவனாரோடு சரிடப் பாகமாகி
ஊர்ந்திடு மரவம் தன்னை ஊர்த்தியாய் கொண்டுவிங்கே
நேர்ந்திடும் தீமையெல்லாம் நின்னருட் திறத்தினாலே
தீர்ந்திடச் செய்யுமம்மா திரிபுர சுந்தரியே. 67

சுந்தரி சோதி வாணி சுமங்கலி சூலி யென்ற
வந்தனை செயவோ ருக்கு வரமெலா மீயு மன்னை
உந்தனைப் பாடியேத்த ஒளிவளர் தீபமாயென்
சிந்தையில் வந்து தங்காய் சிவனருட் சித்துளானே. 68

சித்தெலாம் சிவமேயாகுஞ் செல்வமுன் வரமேயாகும்
வித்தெலாம் நீயேயாகி விளங்குவாய் விருட்சமாக
பத்தரைக் காத்துவுந்தன் பங்கயத் தாளிணையுன்
முத்திதா மூவரேத்தும் முதல்வியே சரணமம்மா, 69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணமென் றடைவோருக்கு சஞ்சலந் தீர்த்தெமக்கு
அரணெனத் திகழுமன்னை ஆதியில் அரவந் கருடன்
முரணுமன் றழித்துத்தவி முடிவிலாக் கருணையீந்தே
மரணமெம் வாசல்சூழ வந்துவுன் னடி பதியே. 70

பதிபசு பாசமெல்லாம் பயின்றபின் நீயே யெங்கள்
கதியெனக் கண்டுவந்து கழலடி வேண்டுவோரின்
விதிதனை மாற்றி வாழ்வில் வெற்றியை யீயுமன்னை
மதியொடு வரவஞ் சூடும் மலைவளர் பகங் கொடியே. 71

கொடிபடர் கொம்பாய் நின்றெம் குறையெலாம் போக்குமன்னை
துடிகொள் நேர் இடையதாகி துணிநிலா சடைக்மணிந்து
கொடியதோர் நாக பாம்புக் குடையதன் கீழிருக்கும்
வடிவுடை மணியேயுந்தன் மலர்ப்பத மிதந்தருமே. 72

இதந்தரும் மனைவிட் டேகி எழிலுறும் கோயில் வந்து
பதயுகம் பணிந்து வேத்திப் பாடி முனையு மெந்தன்
இதயமீ திருந்துநீதான் இன்னருள் சுரந்து நிற்கச்
சதகமே பாடுகின்றேன் சங்கு சக் கரத்தினாளே. 73

சக்கரம் மாலுக் கீந்த சங்கரன் பாகம் மேவும்
தக்கனின் மகளாய் வந்தெம் சஞ்சலம் தீர்க்குமாதே
இக்கணம் வந்து வெங்கள் இடரெலாம் களைய வேண்டி
சிக்கெனப் பிடித்தேனம்மா சிவனிடச் சிறப்புளாளே. 74

சிறந்தொளி ரும்பல வாகனமுந் திருத் தேரழகும்
திறந்தருமே யிரு கோபுரமுஞ் செய் சப்பரமும்
அறஞ்செய வேமிளிர் அமுதளி சபையும் அலைகடல்வாய்
சிறந்திட வேவலம் வந்திடுவா யெழில் சிங்கமதே. 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்க வாகினி செங்கமலாசினி செந்தமி ழர்படு
பங்க மெலாந்தவிர் பார்வதி பயிரவி பரமனிடம்
தங்கு மனோன் மணி தாரணி நாரணி நயினையிலே
தெங்கொடு வேம்பிளஞ் சோலையிலேவளர் சிந்துரமே. 76

சிந்தையும் சிவமுமாகித் தெளிவினுட் சோதியாகி
இந்திரன் பிரமனோடு குறுமுனியகத்தி போற்றும்
மந்திரப் பொருளேயான மாலவன் தங்கையாகி
அந்தமில் பெருமையோங்கும் அதிசய அரவுளாளே, 77

அரவுவன் றனலை தன்னில் அரும்பறா மலர்பறித்தே
பரவுதல் செய்த முன்னைப் பழமைசேர் தாயேயுந்தன்
சிரமிசை நாகஞ்சூட்டித் திங்களைப் பக்கம் வைத்த
பரனிடப் பாகத்தாளைப் பணிந்திடப் பாக்கியமே. 78

பாக்கியப் செய்தே னுன்னைப் பாடியான் துதிப்பதற்கு
வாக்கியம் தந்தாய் நீயே வரகவி பாடுதற்கென்
நாக்கினில் வந்தெனக்கு நலமெலாம் நல்கி நாயேன்
தீக்கதி யேகா வண்ணம் சேர்ப்பயுன் பாதமீதே. 79

பாதபங் கயங்க ளேத்தும் பாலகன் என்பா னுள்ள
பாதக மலத்தை நீக்கி பாவியே னுய்யும் வண்ணம்
மேதகு நெறியைக் காட்டி மெய்ப்பொருள் பாடுமாறு
போதக ராகி நின்றாய் போற்றியுன் பூங்கழலே. 80

பூவெடுத் தன்று நாகம் பொன்னடி போற்றி செய்ய
நாவெடுத் துன்னை யேத்தும் நயினும் கடைப்பட்டேனின்
பாவெடுத் தாண்டு கொள்வாய் பராபரை நயினையேத்தும்
மூவெழுத் தான சத்தி முதல்வியென் கவியேற் றருளே. 81



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிடு மடியா ரின்னல் மாற்றிடு மருந்தேயுன்னைத்
தூற்றிடும் துட்ட ரெல்லாம் தூசென ஆவார் திண்ணம்
நாற்றிசை கடல்நீர் சூழ நடுவிலே நீ யிருந்து
போற்றிசை யன்பருக்குப் புகலிட மம்பிகையே. 82

அம்பிகேகரு ணாகரி பரமேஸ்வரி சிவபார்வதி
நம்பினோர்க் கருள் நாயகி சிவ சாம்பவியே சாம்பரி
வெம்பிணி களை வித்தகி பரன் விமலினி ஜெயமாலினி
நம்பினே னருள் நல்கிடு சிவன் நாரியே உமை நாடவே 83

நாடியுன் கோவில்சேர நலமெலா மருளு நல்ல
ஆடியில் பூர கர்மா ஆனியில் தேரி லேறும்
கோடிமா தவங்கள் செய்த கோமளை குன்றில் தோன்றி
தேடிமா ல் அயனுங் காணா சிவனிடத் தருட் சுடரே. 84

சுடரொடு தாபமேற்கும் சுந்தரி நயினை சூழும்
கடலெழு அமுதமாகக் காட்சிதந் தாட்சி செய்யும்
விடமிரு வரவமேறும் வித்தகி நயினை தன்னில்
நடமிடுந் தாயே யெம்மை நற்கதிக் காத்தவாயே. 85

ஆக்குவாய் காப்பா யெம்மை யழித்தருள் சுரப்பாயென்று
கூக்குரல் போட்டு நிற்கக் குறையெலாந் தீர்க்கு மன்னை
நோக்குவாள் கடைக்கண் ணென்பால் நோய் நொடி வந்தபோது
நீக்குவா ளவற்றை யெல்லா நீடருள் நிலைப்பதற்கே. 86

நிலையிலா வுலகில் வாழ்க்கை நீரதன் மேலெழுத்தாய்
நிலவிட நீயே வாழ்க்கைப் படகினை நீந்தச் செய்யும்
அலைகடல் நடுவிருந்து அண்டமீ ரேழை யாளும்
மலைமகள் உமையே ஞானம் சுரந்திடுந் திருவருளே. 87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருட் செல்வியுந்தன் தேரசைந் தோடும் போது
மருவிநின் பாதமல்லால் மற்றொரு சிந்தை செய்யா
அருளுடை மாந்தர் தங்கள் அருந்துயர் நீக்க வல்ல
பெருமருந் தாகிநின்றாய் பேரருள் சுரக்குமன்றே. 88

சுரந்தனை ஞானப்பாலை தோணியர் புரத்திலன்று
வரந்தனை ஈயப் பிள்ளை வரகவி யாகி நின்றே
கரந்தனைக் காட்டியுந்தன் காட்சியை கண்டு பிரமா
புரந்தனை வணங்கிப் பாடல் புகலியர்க் கருள்செய்தாயே 89

செய்யநின் நாமந்தன்னைத் தினந்தின மோது மன்பர்
உய்யநன் னெறிகள் காட்டும் உமைலமா தொருவரில்லை
நெய்யிலே வெண்ணெய்யாக நிறைந்திடும் நிலையு ளாளே
பொய்கெடப் புவனமோங்கப் பொற்கழல் நாடுவோமே. 90

நாடுவோ மெந்தநாளும் நலமெலாம் நல்குமாறு
கூடுவோம் கோயில் முன்னே கூப்புவோம் கரங்கள் சிரமேல்
சூடுவோ முந்தன் நாமஞ் சூட்டுவோம் புகழஞ்சலிகள்
பாடுவோம் பாவியென்னைத் பார் திருக் கடைக் கண்ணாலே. 91

கண்ணிழந் தொளியே பெற்றோர் கால்கரஞ் செயலிழந்து
புண்ணுளப் பட்டோ ரெல்லாம் பொற்றலம் வந்துவுந்தன்
எண்ணிலா நாமஞ் சொல்லி ஏத்திடும் போது வந்தே
தண்ணளி செய்யுந் தாயே தமியனுக் கருளுவாயே. 92

அருளுவாய் அனைத் துயிர்க்கும் அர்ச்சனை செய்து பாடி
உருகியே ஓதுமன்பர் உறுபிணி களையச் செய்தே
அருநெறி காட்டி யாள்வாய் அம்பிகே நாளுமுந்தன்
திருப்புகழ் பாடுதற்கு தேவிநீ வாராய் முன்னே. 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னையென் வினையினாலே மோசமே போயுமன்றே
என்னையுன் பாதமேத்த இன்னருள் சுரந்தளித்த
அன்னையே வன்னி வாழும் அரசியே அக்கமெல்லாம்
தென்னையும் வேம்பும் சூழும் தென்றலில் நிலவுவாயே. 94

நிலமொடு நீர்நெருப்பு நீள்விசும் பாகி மேலும்
உலவையா ளொளிரு மன்னை யுலகமீ ரேழை யாளும்
மலரவன் மாலும் போற்றும் மத்தவன் வாம பாகம்
கலந்திடும் பொன்னே யெம்மைக் காத்திட வாராயன்னே. 95

அன்னமா யயனுமாற ஏனமாய் மாலுந் தேட
முன்னவ னாகி நின்ற முதல்வனைப் பாகம் வைத்த
அன்னையே அரவமேத்தும் அரசியே அன்ன மேறும்
உன்னையே பாடிநிற்கும் என்னையுங் காத்தருளே. 96

காத்தருள் புரியு மன்னை ககனமும் கிரியுங் கடலும்
பூத்தவள் புவனமேழும் போற்றிடும் பெருமை சேரும்
நாத்திரன் பாகமேவும் நாயகி நயினை யாளுன்
சேத்திரம் அடைவோ ருக்கு சித்திகள் சேர்க்கும் தேனே. 97

தேனினு மினியா ளிந்தத் தேசமீ ரேழை யாளும்
மானினேர் விழியா ளுன்னை மனத்தியை நிறுத்திநல்ல
ஆனிமா மாதந் தன்னில் அழகுறத் திருவிழாக் காண்
நானிலம் போற்றுந் தேவே நால்கடல் அலையுளாளே. 98

அலைகடல் தாண்டியுந்தன் அருட்கடல் வேண்டு வோர்க்கு
கலைகடம் பொருளுமீயுங் காரிகை நயினையின் கண்
நிலை பெறும் சத்தியுன்பால் நிறுத்திடும் பாடல் நூறும்
சிலையெழுத் தாகிநின்று சிறப்புறச் செய்வாய் என்னே 99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையுன் னடியனாக்கி இருவினை நீக்கி யாளும்
அன்னையுன் னருளினாலே அன்றுயிர் மீளப் பெற்றுப்
பின்னையுன் பாதமல்லால் பிறிதொரு வரமும் வேண்டேன்
கன்னலே தேனே பாலென் கவிதையோர் கற்பகமே 100

## நூற் பயன்

சத்தியுஞ் சிவமுமாகித் தாயுமாய்த் தந்தையாகிச்
சித்திகள் செய்யுமுந்தன் சேவடி தன்னில் நாயேன்
பத்தியோ டருளும் நூறு பாடலின் பிழையறுக்கும்
வித்தியா ! விண்ணோ ரேத்த விளங்கிடும் நாகம்மாளே.

— சுப மங்களம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு - வினா விடை

01. சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டென்பதைக் கண்டறிந்தவர் யார்?

சேர் ஐசக் நியூட்டன்

02. மணிமேகலை என்னும் நூலை இயற்றியவர் யார்?

மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

03. எவர்சில்வர் பாத்திரங்களை மினிரச் செய்யும் பொருள் எது?

குளோமியம்

04 தாய்ப்பாலிலுள்ள நோய் எதிர்ப்புப் பொருளின் பெயர் யாது?

இம்மியூனோ குளோபின்

05. கல்லீரலிரலுடன் நேரடித் தொடர்புடைய நோய் எது?

மஞ்சட் காமாலை

06. பென்சிலின் மருந்து தயாரிக்கப்படும் பூஞ்சண வகை எது?

பென்சிலியம்

07. பூமி ஒரு கோளப்பொருள் என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானி யார்?

பைதகரசு

08. பெண்களின் அழகுச் சிறப்பை வரையுறுத்துக்கூறும் நூல் எது?

சாமுத்திரிக இலக்கணம்

09. மணிமேகலையின் துறவுக்குக் காரணமாயிருந்த துறவி யார்?

அறவண அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 மின்குமிழ் இழை உருகாமல் வெப்பத்தை தாங்கக்கூடிய உலோகம் எது?

தங்குதன்

11. இரசாயன குறியீட்டு முறையை முதன்முதல் அறிமுகப் படுத்தியவர் யார்?

ஜோன்ஸ் ஜெகொப்பர் ஸிலியஸ்

12 சர்வதேச கோதுமை சோளம் அபிவிருத்தி மத்திய நிலையம் எங்கேயுள்ளது?

மெக்சிக்கோ

13. 997 ஆம் ஆண்டுக்கான உலகு அழகுராணி யார்?

டயானா ஹெய்டன் - இந்தியாவின் மும்பாய் நகரைச் சேர்ந்தவர்

14. இலங்கைக்கு சர்வதேச கிரிக்கெட் அந்தஸ்து கிடைத்த பின்பு அணியின் முதலாவது தலைவராக இருந்தவர் யார்?

பந்துல வர்ணபுர

15. நாட்டின் பெயர் அச்சிடாது முத்திரை வெளியிடும் நாடு எது?

இலண்டன்

16. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆங்கிலப் பாடசாலை எது?

றோயல் கல்லூரி

17 முதல் கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்திலேயே இரண்டு சதங்களைப் பெற்ற முதல் இலங்கை வீரர் யார்?

பெரண்டன் குறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மனிதன் முதல் முதலில் பயன்படுத்திய உலோகம் எது?

செம்பு

19. இரத்த அழுத்தத்தை அளப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவி யாது?

ஸ்பிக்மானோ மீற்றர்

20. இருதயமாற்று சத்திரசிகிச்சையை கண்டு பிடித்தவர் யார்?

கிறிஸ்றியன் பேர்னாட்

21. ஈழத்துச் சிறுகதை மூலவர் எனப்படுபவர் யார்?

சி. வைத்தியலிங்கம்

22. மிருக நோய் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?

கென்யா

23. போலியோ தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?

ஜொனாஸ் ஸோல்க்

24 சர்வதேசங்களுக்கான கடல்பாதுகாப்பு நிறுவனம் எங்குள்ளது?

இலண்டன்

25. 'கப்பலோட்டிய தமிழன்' எனப் புகழ்பெற்ற பெரியார் யார்?

வ. உ. சிதம்பரப்பிள்ளை

26. முதன்முதலில் விண்வெளிக்குச் சென்ற பெண்மணி யார்?

வலன்டீனா தெறிஸ்கோவ்

27. சடத்துவ வாயுக்களின் தன்மையைக் கண்டறிந்தவர் யார்?

வில்லியம் ராம்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 சர்வதேச விமானப் போக்குவரத்து நிலையம் எங்கே உள்ளது?

மொன்றியல் ( கனடா )

29 உலகத்தில் பெரிய வங்கி எது?

பாங் ஒவ் அமெரிக்கா

30. விசர்நாய்க் கடிக்கான ஊசிமருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?

லூயி பாஸ்டர்

31 உலகப்படத்தை முதன்முதலில் வரைந்தவர் யார்?

குளோடியஸ் தொலமி

32. சர்வதேச குழந்தைகள் நலநிதி நிறுவனம் எங்குள்ளது?

நியூயோர்க்

33. உலகிலேயே தங்கத்தைக் கூடுதலாக உற்பத்தி செய்யும் நாடு எது?

தென்னாபிரிக்கா

34. அதிகமான பற்களையுடைய ஜந்து எது?

நத்தை

35. மனிதனைப் போல் மூச்சுக்குழல் உள்ள ஜந்து எது?

தவளை

36 1969 - ஜூலை 21ல் சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதர்கள் யாவர்?

நீல் ஆம்ஸ்ரோங், எட்வின் அல்றின்

37. தாவரங்களின் உணவுக்குத் தேவையான பச்சியத்தின் பெயர் யாது?

குளோரபில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38 நீந்தத் தெரியாத மிருகங்கள் எவை?

ஒட்டகம், பன்றி

39. இருதய வால்வுகள் செய்வதற்கு பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள் எது?

டப்ளான்

40. குளிர்சாதனப் பெட்டியில் உஷ்ண நிலையை கட்டுப்படுத்தும் பாகம் எது?

தெர்மோஸ்டெட்

41. காற்று மண்டலத்தின் சராசரி அமுத்தம் எவ்வளவு?

76 செ. மீ. பாதரசத்தின் உயரம்

42. மின்சக்தியை ஒலிசக்தியாக மாற்றும் கருவி எது?

மைக்ரோபோன்

43 பிறக்கின்ற குழந்தை எப்பொழுது சுவாசிக்கின்றது?

முதன் முறையாக அழும் போது

44. இருதயத் துடிப்பை தூண்டும் பகுதி எது?

பேஸ்மேக்கர்

45. உடலின் செய்தித் தொடர்புக்கு காரணமான இரசாயனப் பொருள் எது?

அசிட்டில் சோலைன்

46. உடலின் சராசரி வெப்ப நிலை எவ்வளவு?

37° சென்டிகிரேடு அல்லது 98. 4° பரனைட்

47. உலகின் முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தையின் பெயர் என்ன?

லூயி பிரவுன் - இங்கிலாந்து. பிறந்த திகதி 25. 07. 1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. பௌதீகத்தில் நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி யார்?

டாக்டர் சி. வி. இராமன் ( 1930 )

49 சூரியனின் சீதோஷ்ண நிலையை அளக்கும் கருவி எது?

பைரோமீட்டர்

50. திரவ ரூபத்தில் உள்ள உலோகம் எது?

பாதரசம்

51. டைனமைட்டின் இரசாயனப் பெயர் என்ன?

கிளிசரின் டிரை நைரேட்

52. அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி யார்?

ஜார்ஜ் வாஷிங்டன்

53. உலகின் முதல் பெண் பிரதம மந்திரி யார்?

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

54. இலங்கையில் இலவசக் கல்வி புகுத்தப்பட்ட தினம் எது?

01- 10- 1945

55. இலங்கையில் இலவசப் புத்தக விநியோகம் ஆரம்பிக்கப் பட்ட ஆண்டு எது?

1980

56, இலங்கையில் தேயிலை, தென்னை, இறபர், சோயா அவரை, உருளைக்கிழங்கு, பருத்தி ஆகியவற்றின் ஆராய்ச்சி நிலையங்கள் எங்கெங்கே அமைக்கப்பட்டுள்ளன?

தேயிலை — தலவாக் கொல்லை
தென்னை — லுணுவில
இறபர் — அகலவத்தை
சோயா அவரை — கண்ணொருவ
உருளைக் கிழங்கு— சீத்த எலிய
பருத்தி — அம்பாந் தோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. உலக நாடுகளின் சிறந்த திரைப்படங்களுக்காக அமெரிக்காவினால் வழங்கப்படும் விருது யாது?

ஆஸ்கார் விருது

58. இருதய துடிப்பினை அளக்கப்படும் கருவி எது?

கார்டியோகிராப்

59. விமானத்தின் வேகத்தை அளக்க உதவும் கருவி எது?

ராக்கோ மீட்டர்

60. சமாதானத்தின் அடையாளமாக விளங்கும் இலை எது?

ஒலிவ்

61. கீதாஞ்சலி என்னும் நூலை இயற்றியவர் யார்?

ரவீந்திரநாத் தாகூர்

62. சூளவம்சம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

தர்மகீர்த்தி தேரோ

63. ஐக்கிய அமெரிக்கா எத்தனை மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது?

ஐம்பது

64. ஒரு அங்குலம் எத்தனை சென்டி மீற்றர்?

2.540 செ. மீற்றர்

65. இலங்கைத் தீவின் பரப்பளவு யாது?

25332 சதுர மைல் அல்லது 65610 சதுர கிலோ மீற்றர்

66. உலகின் மிகப்பெரிய தீவு எது?

கிறின்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67 கற்பூர உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மரம் எது?

சூரப்புன்னை

68. ஆங்கில இலக்கியத் துறையில் உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர் யார்?

பெர்னாட்ஷா

69. வில்லியம் சேக்ஷ்பியர் எழுதிய பிரசித்தி பெற்ற நாடகங்கள் எவை?

ரோமியோ ஜூலியட், ஹம்லெட், மக்பெத் ஒத்தெல்லோ, லியர் அரசன், ஜூலியசீசர்

70. சோவியத் ருஷ்யாவின் தந்தை எனப் போற்றப்பட்டவர் யார்?

லெனின்

71. இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?

ரவீந்திரநாத் தாகூர்

72. நவீன மருத்துவத் தாதித் தொழிலின் தாயென அழைக்கப்பட்டவர் யார்?

நைட்டிங்கேல் அம்மையார்

73. முதன் முதலில் சந்திரனில் மனிதரின்றி இறங்கிய செய்மதி எது?

ஸ்பூட்னிக் - 9

74 மனிதனுக்கு நோய்களை உண்டாக்கும் கிருமிகள் எவை?

பக்டீரியாக்கள், புரோட்டோசோவா, வைரஸ்

75. வைரஸ் கிருமிகளினால் பரவும் நோய்கள் எவை?

இளம்பிள்ளை வாதம், தடுமன், அம்மை, மஞ்சள் காய்ச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. இலங்கையின் தாள் நாணயத்தில் கையொப்பமிடத் தகுதி யுள்ள இருவர் யார்?

மத்தியவங்கி ஆளுநர் நிதியமைச்சர்

77. அணிசேரா அமைப்பில் இலங்கை அங்கத்துவம் பெற்ற ஆண்டு எது?

1976

78. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

மணிலா (பிலிப்பைன்ஸ்)

79. இலங்கையின் நீள அகலங்களைக் கிலோமீற்றரில் தருக?

நீளம் 432 கி. மீ அகலம் 224 கி. மீ

80. சார்க் அமைப்பு எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டது?

1985

81 அணிசேரா நாடுகள் அமைப்பில் இருந்து விலகிய நாடு எது?

பர்மா

82. சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிலையம் எங்கே உள்ளது?

இந்தியா

83. சர்வதேச வெப்பவலய விவசாயத் தாபனம் அமைந்துள்ள இடம் எது?

நைஜீரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. இலங்கையின் சனத்தொகைக்கு கிட்டத்தட்ட சுமாராக வுள்ள நாடு எது?

அவுஸ்ரேலியா

85. பிரெஞ்சுப் புரட்சியின் போது தேசிய மன்றம் வெளியிட்ட வாசகம் எது?

மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும்வரை சம வுரிமைகளை உடையவன்

86. உலகில் அதிகூடிய மழைவீழ்ச்சி பெறும் இடம் எது?

இந்தியாவிலுள்ள சீராபுஞ்சி

87. புவியொழுக்கு என்றால் என்ன?

பூமி சூரியனைச் சுற்றி வருகின்ற நீள்வட்டப் பாதை

88. பௌதீகச் சூழலின் அடிப்படை இயல்புகள் எவை?

தரைத் தோற்றம், காலநிலை, இயற்கைத் தாவரங்கள்

89. இலங்கையின் விமானக் கடிதவுறையில் அச்சடிக்கப் பட்டுள்ள புனித ஆலயம் எது?

தலதாமாளிகை

90. பூமியின் கோளங்கள் எவை?

நீர்க்கோளம், நிலக்கோளம், வாயுக்கோளம்

91. உலகில் மிக ஆளமான சமுத்திரப் பகுதி எது? எங்குள்ளது?

மரீனா ஆழி - பசுபிக் சமுத்திரத்தில் உள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. தெற்கேயுள்ள பிரித்தானியா என்றழைக்கப்படும் நாடு எது?

நியூசிலாந்து

93. வளிமண்டலம் என்றால் என்ன?

பூமியைச் சூழ்ந்து காணப்படும் வாயுப்படலம்

94 ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற முதல் இலங்கையர் யார்?

டங்கன் வைற்

95. செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகரின் பெயர் என்ன?

ஜோன் டுவாட்

69. உயிர்களின் பரிணாமக் கொள்கையை வெளியிட்டவர் யார்?

சார்ள்ஸ் டார்வின்

97. இரட்சண்ய யாத்திரிகம் என்ற நூலின் பெயர் என்ன?

கிருஸ்ணபிள்ளை

98. செல்சியஸ் அளவுத் திட்டத்தில் பனிக்கட்டி உருகும் வெப்பநிலை எவ்வளவு?

32° செல்சியஸ்

99. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைத்து வெட்டப்பட்டிருக்கும் கால்வாய் எது?

சுயெஸ் கால்வாய்

100. சர்வதேச நீதிமன்றம் எங்கேயுள்ளது?

நெதர்லாந்திலுள்ள கேக் நகரில்

101. இலங்கையில் தொலைக்காட்சிக் கோபுரம் எங்கே அமைந்துள்ளது?

பீதுருதாலகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102. செய்மதி தொடர்புகளைக் கட்டுப்படுத்தும் புவிநிலையம் இலங்கையில் எங்குள்ளது?

பாதுக்கை

103. ஒலிம்பிக் சின்னத்திலுள்ள ஐந்து வளையங்களும் எவற்றைக் குறிக்கின்றன?

ஐந்து கண்டங்களை

104. கௌதம புத்தரின் தந்தையின் பெயர் என்ன?

சுத்தோதனன்

105. நோபல் பரிசு வழங்கும் திட்டம் எத்தனையாம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது?

1901

106. விவிலிய நூலில் உள்ள பகுதிகள் எவை?

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு

107. ஓவியக் கலையின் தந்தை எனப்படுபவர் யார்?

லியனாடோ டாவின்சி

108. யுனெஸ்கோ தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

நியூயோர்க்

109. ஆர்தர் கிளார்க் விருது பெற்ற இந்தியர் யார்?

கலாநிதி ஜெயக்பால்

110. உலகிலேயே கண்ணாடித் தொழில்நுட்பத்திற்கு பிரசித்தி பெற்ற நாடு எது?

பெல்ஜியம்

111. நன்னூலை இயற்றியவர் யார்?

பவணந்தி முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112. உலகெங்கிலுமுள்ள முக்கியமான நபர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து வரும் அமைப்பு எது?

## WHO IS WHO

113. சீவக சிந்தாமணி என்ற நூலை இயற்றியவர் யார்?

திருத்தக்க தேவர்

114 நீருக்கடியில் உள்ள ஒலியை அளக்கப் பயன்படும் கருவி யாது?

ஹைட்ரோபோன்

115. கிரேக்கர்கள் தந்தையாக நினைத்து வழிபடும் பொருள் யாது?

அட்லஸ் விண்மீன்

116. புரூஸ்லி பயன்படுத்திய தற்பாதுகாப்புக் கலையின் பெயர் என்ன?

(விங் - சுன் Wing Chun)

117. ஹோமியோபதி மருத்துவ முறையின் தந்தையென அழைக்கப்படுபவர் யார்?

ஹானிமென்

118. தமிழில் முதன் முதலில் வெளிவந்த வாரம் இருமுறை வெளியாகிய இதழ் எது?

சுதேச மித்திரன்

119. பண்பாடுகளின் தாய் என்றழைக்கப்படும் நகரம் எது?

பாரிஸ்

120. அகில உலக தொழிலாளர் அமைப்பு எங்கே உள்ளது?

ஜெனிவாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121. இலங்கையில் முதன்முதலாக சனத்தொகை மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டு எது?

**1871**

122. இலங்கைப் பாராளுமன்றத்தின் 10வது பொதுத்தேர்தல் எப்போது நடைபெற்றது?

**16 - 08 - 1994ல்**

123. சர்வதேச தமிழ் ஒருங்கிணைப்புக் கழகத்தின் உலக அமைப்பாளர் யார்?

டாக்டர் வா.மு. சேதுராமன்

124. பரிசுத்த பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பந் அண்மையில் வெளியிட்ட நூல் எது?

நம்பிக்கையின் விளிம்பைக் கடத்தல்

125. பண்டா—செல்வ ஒப்பந்தம் எத்தனையாம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது?

**1958**

126. 'விவேகானந்த தத்துவ வித்தகம்' என்ற நூலை இயற்றியவர் யார்?

கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி

127. 'மங்கிய நீலப்புள்ளி' என்ற வானவியல் புத்தகத்தை வெளியிட்டவர் யார்?

கால் சேகன்

128. இந்தியாவில் நோபல் பரிசு பெற்ற மூவரும் யார்?

டாக்டர் சி. வி. இராமன்

கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்

அன்னை திரேசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129 வித்தியா விற்பன்னர் என அழைக்கப்பட்டவர் யார்?

சேர். பொன். அருணாசலம்

130. இலங்கைச் சட்டசபையில் அங்கத்துவம் வகித்த மூன்று சகோதரர்களும் யாவர்?

சேர். பொன். குமாரசாமி
சேர். பொன். அருணாசலம்
சேர். பொன். இராமநாதன்

131. நைட் பட்டம் பெற்ற முதலாவது தமிழர் யார்?

சேர் முத்துக் குமாரசுவாமி

132. இலங்கையில் முதன்முதல் தோற்றம் பெற்ற கட்சி எது?

இலங்கைத் தேசிய காங்கிரஸ்

133. மறைமலை அடிகளின் இயற்பெயர் என்ன?

சுவாமி வேதாசலம்

134. தமிழிலே முதன் முதல் தோன்றிய அகராதியை இயற்றியவர் யார்?

சதுரகராதி— வீரமாமுனிவர்

135. யாழ்ப்பாண வைபவமாலையை இயற்றியவர் யார்?

மயில்வாகனப் புலவர்

136 மகாத்மா காந்தியின் இயற்பெயர் என்ன?

மோகனதாஸ்

137. மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்றவர் யார்?

நாதுராம் விநாயகக் கோட்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

138. இரும்பு வண்ணத்துப் பூச்சி என பிலிப்பைன்ஸ் மக்களால் வர்ணிக்கப்பட்டவர் யார்?

இமெல்டா மார்க்கோஸ்

139. திருக்குறளை முதன் முதலில் அச்சேற்றிய பேராசிரியர்கள் யார்?

1. திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயர்
2. நல்லூர் ஆறுமுகநாவலக

140. இலங்கையில் முதன் முதலில் தமிழில் தோன்றிய பத்திரி எது?

உதயதாரகை

141 ஐக்கிய நாடுகள் சபையில் வீட்டோ அதிகாரமுள்ள நாடுகள் எவை?

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து

142. தொல்காப்பியரின் இயற்பெயர் என்ன?

திரணதூமாக்கினியார்

143. அகத்தியர் இயற்றிய முதற் சங்க நூல் எது?

அகத்தியம்

144. ஜப்பானின் தேசிய விளையாட்டு எது?

நீச்சல்

145. தமிழிலுள்ள ஐஞ்சிறுகாப்பியங்களும் எவை?

சூளாமணி, உதயணன் காதை, நீலகேசி, நாககுமார காவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் எவை?

தேம்பாவணி, ஐந்திலக்கணத் தொன்னூல் சதுரகராதி வேதியர் ஒழுக்கம், அவிவேக பூரண குருகதை

147 மகிந்தன் முதன் முதல் சமயப் பிரச்சாரம் செய்த இடத்தில் நிறுவிய கல்வி நிறுவனம் எது?

சேதிய பப்பத விகாரை

148. சிவனொளிபாத மலையில் மறுபெயர்கள் எவை?

ஆதாம்மலை, சமந்தகூடம், ஸ்ரீபாதம்

149. இலங்கையை ஆட்சி செய்த முதல் அரசி யார்?

அனுலா

150. இலங்கையின் பூர்வீக மாகாணங்கன் எவை?

ராஜரட்டை, மாயரட்டை, உறுகுணரட்டை

15 . கிறிக்கெற் துடுப்பின் நீளம் எவ்வளவு?

36 அங்குலம்

152. இலங்கைக்கு கிறிக்கெற் போட்டியில் டெஸ்ட் அந்தஸ்து எத்தனையாம் ஆண்டு கிடைத்தது?

1982

153. மரதன் ஓட்டத் தூரம் எவ்வளயு?

4219 கிலோ மீற்றர்

154. வைத்திய சாத்திரத்தின் த தை என அழைக்கப்படுபவர் யார்?

கிப்போக்கிரட்டீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

155. எயிட்ஸ் நோய் ஆராய்ச்சி நிலையம் எங்கேயுள்ளது?

அன்றிவேர்ப்

156. புரதான இலங்கையின் கிராமசபை எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?

கம்சபா

157. தக்கயாகப் பரணியைப் பாடியவர் யார்?

ஒட்டக்கூத்தர்

158. அடிப்படை நிறங்கள் எவை?

சிவப்பு, பச்சை, ஊதா

159. இலங்கையின் முதற் கல்வியமைச்சர் யார்?

ஹெட்டி ஆராய்ச்சி

160. உலக உணவு விவசாய ஸ்தாபனம் அமைந்துள்ள இடம் எது?

மணிலா (பிலிப்பைன்ஸ்)

161. 1994ம் ஆண்டு வியாழக் கோளுடன் மோதிய வால்வெள்ளியின் பெயர் எது?

சுமேக்கல் லேவி - 9

162 'சானா' என்னும் புனைபெயரையுடைய நாடகாசிரியர் யார்?

செல்லத்துரை சண்முகநாதன்

163. குட்டித் தெபல் காப்பியம் எனும் இலக்கணவிளக்கம் என்னும் நூலை இயற்றியவர் யார்?

வைத்தியநாத நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164. ''இலங்கையில் பதினோராண்டுகள்'' எனும் நூலை இயற்றியவர் யார்?

மேஜர் போப்ஸ்

165. குண்டலகேசியை இயற்றியவர் யார்?

நாதகுப்தனார்

166. இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தை முதன் முதல் வரைந்தவர் யார்?

சேர் ஐவர் ஜன்னிங்ஸ்

167. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?

ஆனந்த சமரக்கோனி

168. இலங்கையின் தேசிய கீதத்துக்கு இசையமைத்தவர் யார்?

அமரதேவா

169. சிறாபுராணத்தை அடிப்படையாக வைத்து சீறாக்கீர்த்தனையை இயற்றியவர் யார்?

செய்யது அபூபக்கர் புலவரி

170. இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

முதுதமிழ் புலவர் மு. நல்லதம்பி

171. இங்கிலாந்தின் அதியுயர் விருதான புக்சர் விருதைப் பெற்றவர் இந்திய எழுத்தாளர் யார்?

அருந்ததிராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

172. முதலாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி எங்கே எப்போது நடைபெற்றது?

லத்தீன் அமெரிக்காவிலுள்ள உருகுவே நகரில் **1930 ல்**

1 3. புத்தரின் வரலாற்றை 'இரத்தத்தால் எழுதிய ஜப்பானிய மன்னன் யார்?

சு. தோக்கு

174 உலகில் மிகவும் வயதான பெண் என்ற பெயரைக் கின்னஸ் புத்தகத்தில் பதிந்து 1999 ஜனவரியில் 140 வது வயதில் காலமாகியவர் யார்?

சாராகிளார் (ஓமான் நாட்டைச் சேர்ந்தவர்)

175. இலங்கை வங்கியின் தலைவரின் பெயர் என்ன?

திரு. தயான் டி. சில்வா

176. எழுத்துலக மும்மணிகள் என அழைக்கப்பட்ட இலங்கையர்கள் யாவர்?

மகாகவி உருத்திரமூர்த்தி

அ. ந. கந்தசாமி

அ. செ. முருகானந்தன்

177. உலகில் முதன் முதலில் நைலோன் துணியில் நாணயத்தை அச்சடித்த நாடு எது?

ஜேர்மனி

178. சர்வதேச சமுத்திர ஆண்டாக ஐ. நா. சபையால் பிரகடனப் படுத்தப்பட்ட ஆண்டு எது?

**1998**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179. அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பரிசு பெற்ற இலங்கையர் யார்?

சுனிலா அபயசேகரா

180. பாங் கொக்கில் நடை பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற இலங்கை வீரர்கள் யாவர்;

தமயந்தி தர்ஷா, சுகத் திலகரத்தினா
(400 மீற்றர் ஓட்டம்)

181. அன்னை தெரேசாவின் இயற் பெயர் என்ன?

அக்னெஸ் கொன்வா பெஜாகியூ

182. அன்னை தெரேசாவின் சமூக சேவைப் பணியகத்தின் பெயர் என்ன?

அன்பின் தூதுவர்

183. இலங்கையின் தற்போதைய தேசியக் கொடி அறிமுகப் படுத்தப்பட்ட தினம் யாது?

1978 செப்டெம்பர் 07

184 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் யார்?

திரு. வி. என். மதியழகன்

185. இலங்கை விமானப்படைத் தளபதியின் பெயர் என்ன?

எயார் மார்சல் ஜயலத் பெயக்கொடி

186. முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டி எங்கே, எப்போது நடை பெற்றது?

இந்தியாவிலுள்ள டில்லி நகரில் 1951 ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

187. பதின் மூன்றாவது ஆசிய விளையாட்டுப் போட்டி எங்கே எப்போது நடைபெற்றது?

பாங்கொக்கில் — 1998ல்

188. இலங்கையிலுள்ள நிர்வாக மாவட்டங்கள் எத்தனை?

25 (இருபத்தைந்து)

189. ஜனசக்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்காளி அமைப்பு எது?

சேவாலங்கா

190. இருபத்தாறாவது சர்வதேச திரைப்பட விழா எங்கே நடைபெற்றது?

மும்பாயில் (1995.தை.10)

191. விண்வெளியில் 442 நாட்கள் பறந்து உலக சாதனைய நிலை நாட்டியவர் யார்?

வலேரிபாலியா கோப்

192. பங்களாதேசத்தில் அஞ்ஞாத வாசமிருக்கும் முஸ்லிம் பெண் எழுத்தாளர் யார்?

நஸ்லிமா நஸ்ரின்

193. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

வீரமா முனிவர்

194. இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவரின் பெயர் என்ன

திரு. மங்கள முனசிங்க

195. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயத்தவர் யார்8

G. U. போப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

196. சீடா உதவிகள் எந்த அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றன?

சுவீடன்

197. உலகிலேயே மிகப் பெரிய முஸ்லிம் நாடு எது?

இந்தோனேசியா

198. பஞ்ச பட்சிகள் எவை?

வல்லூறு, ஆந்தை, காகம், மயில், கோழி

199. கத்தோலிக்க மதத்தை முன்முதலில் தழுவிய கோட்டை மன்னன் யார்?

புவனேகபாகு

200. சீதாவாக்கையுடன் கண்டி இராச்சியம் இணைவதற்கு காரணமான யுத்தம் எது?

பலனை யுத்தம்

201. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவர் யார்?

கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்

202. காஞ்சியில் காமகோடி பீடத்தை ஏற்படுத்தியவர் யார்?

ஆதிசங்கரர்

203. இலங்கையின் கலாச்சார முக்கோணப் பிரதேசங்கள் எவை?

அனுராதபுரம், பொலனறுவை, கண்டி

204. நோய்த் தடுப்பு இயக்கத்தின் சின்னம் யாது?

பஞ்சாயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

205. கதிர்வீச்சு மூலகங்கள் எவை?

யுரேனியம், தோரியம். ரேடியம்

206. குருதிக் குழாயில் உள்ள கொழுப்புப் படிவின் பெயர் என்ன?

கொலஸ்ரோல்

207. தலதா மாளிகையைக் கட்டுவித்தவர் யார்?

கீர்த்தி ஸ்ரீ மேவன்

208. சமாதானத்துக்கு மட்டும் நோபல் பரிசு கொடுக்கும் நாடு எது?

நோர்வே

209. பல் சுகாதாரத்துக்கு தேவையான மூலகம் எது?

புளோரைட்

210. இலங்கையில் இயற்கையாக பொஸ்பேற் உள்ள இடம் எது?

எப்பாவல

211. இலங்கையில் தனியார் மிருகக்காட்சிச் சாலை எங்கேயுள்ளது?

அகுங்கல்ல

212. இலங்கையில் எத்தனை கல்விமாவட்டங்கள் உள்ளன?

31 (முப்பத் தொன்று)

213. இலங்கை சாகிறாக் கல்லூரியின் ஸ்தாபகர் யார்?

அறிஞர் சித்திலெப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

214. 1998ம் ஆண்டிற்கான உலக அழகு ராணி யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

ஜாக்கின் அசிலரா மார்க்கிங்—வெனிலா நாட்டவர்

215. உலகில்நாணயப் புழக்கம் இல்லாத நாடு எது?

பராகுவே

216. இலங்கையில் தேசியமயமாக்கல் சட்டத்தைக் கொண்டு வந்தவர் யார்?

S.W.R.D. பண்டாரநாயக்கா

217. இலங்கையில் அரச பெருந்தோட்ட காணிகளை நிர்வகிக்கும் அமைப்புக்கள் எவை?

ஜனவசம, உடவசம, நாட்சா

218. கிழக்கிலங்கையின் புதிய துறைமுகம் எது?

ஒலுவில்

219. பரதக் கலைக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்காக தென்னாபிரிக்காவில் 1994ம் ஆண்டு நடராஜா மயூரவிருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இலங்கையர் யார்?

நர்த்தகி பாலசுந்தரி பிராதலிங்கம்.

220. 1008 சிவாலயங்களும் 108 விஸ்ணு ஆலயங்களும் நிறைந்த இந்திய நகரம் எது?

காஞ்சிபுரம்

221. இந்தியாவில் சினிமாத் தொழிலை அறிமுகப்படுத்திய யார்?

தாதா சாஹேப் பால்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

222. அண்மையில் தாதா சாஹேப் பால்கே விருதுபெற்ற நடிகர் யார்?

சிவாஜி கணேசன்

223. G 8 என அழைக்கப்படும் கைத்தொழில் நாடுகள் எவை?

ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி கனடா ரஷ்யா, பிரிட்டன் அமெரிக்கா

224. இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுவது குறித்து அறியும் பொருட்டு 1998 ல் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ. நா. சபையின் பிரதிநிதி யார்?

ஒலரா ஒட்டுணு

225. அவுஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு எது?

கிரிக்கெட்

226. 1997 ம் ஆண்டு முத்திரை வெளியிடப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட நான்கு பெரியார்களும் யாவர்?

பேராசிரியர் சு. வித்தியானந்தன்
ஜனாப் அப்துல் அஸீஸ்
சங்கைக்குரிய ஹேறகொட ஸ்ரீ இந்ரசார தேரர்
திருமதி விரியன் குணவர்த்தன

227. தங்க ஆசியா - 1997 கண்காட்சி எங்கே நடைபெற்றது?

கோலாலம்பூர்

228. திரிகடுகம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

நல்லாதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

229. மகாகவி என அழைக்கப்பட்ட இலங்கையர் யார்?

திரு. து. உருத்திரமூர்த்தி

230. இலங்கையின் தேசியக் கொடியில் நான்கு மூலைகளிலும் அரச இலைகள் எத்தனையாம் ஆண்டில் சேர்க்கப்பட்டன?

1977

231. இலங்கையின் தற்போதைய சட்டமா அதிபர் யார்?

திரு. பிரியந்த பெரேரா

232. இலங்கை இராணுவத் தளபதியின் பெயர் என்ன?

லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியா

233. ஒரு மைலில் எத்தனை கிலோ மீற்றர்கள் உள்ளன?

1 6 கிலோ மீற்றர்

234. மகாவலி கங்கையின் நீளத்தைக் கிலோ மீற்றரில் தருக.

333 கிலோ மீற்றர்

235. மிகப் பழமையான தேசப்படத்தை வரைந்தவர் யார்? அதில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் பெயர் யாது?

தொலமி, தப்ரோபேன்

236. இலங்கைக்குரிய பழைய பெயர்கள் யாவை?

தப்ரோபேன், தம்மபண்ணி, செரண்டிப், சீல துவீபம், சீலன், செயிலாவே

237. 'இலங்கையர் கோன்' என்னும் புனைப்பெயரையுடைய அறிஞர் யார்?

திரு. ந. சிவஞானசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

238 ஆதிசங்கரர் பிறந்த இடம் யாது?

பெரியாறு என்னும் நதிக்கரையில் உள்ள காலடி என்னும் இடம்

239. கீதகோவிந்தத்தை இயற்றியவர் யார்?

ஜெயதேவர்

240. பின்புறமாக மரத்தில் ஏறும் மிருகம் எது?

கரடி

241 உலகப் புகழ்பெற்ற தாஜ்மகாலைக் கட்டிய ஷாஜகானின் இளமைப் பெயர் என்ன?

ஜகாங்கீர் குர்ரம்

242. பஞ்சாப்பில் பாயும் ஐந்து நதிகளும் எவை?

ஜீலம், சேனாப், ரவி, பியாஸ், சட்லெஜ்

243 ஆங்கில இலக்கியத்துறையில் உலகப் புகழ்பெற்றவராக விளங்கிய ஜார்ஜ் பெர்னார்ட்ஷா எழுதிய நாடகங்கள் எவை?

வாரன் அம்மையார் தொழில், ஆயுதங்களும் மனிதனும், பிக்மேலியன் ஆப்பிள் வண்டி, புனித ஜோன்

244. அமெரிக்காவில் வழங்கப்படும் விருதின் பெயர் என்ன?

புலிட்சர் விருது

245. வானம்பாடியை தேசியப் பறவையாகக் கொண்ட நாடு எது

டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

246. இலங்கையின் தேசியப் பறவை எது?

காட்டுக் கோழி

247. சார்க் நாடுகளின் முதலாவது சாஃப் விளையாட்டுப் போட்டி எங்கே எப்போது நடைபெற்றது?

நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் – 1984

248. போதை மருந்துக் குற்றச்சாட்டு நிராகரிக்கப்பட்டு விடுதலையான இலங்கை வீரர்கள் யார்?

சுசந்திகா ஜயசிங்க

249. இலங்கை மனித உரிமைகள் செயலணிக் குழுவினர் தலைவர் யார்?

சி. டி. ஜான்சி

250. நந்தி என்ற புனைப்பெயரையுடைய அறிஞர் யார்?

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்

251. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகத்தின் பெயர் என்ன?

சௌமிய பவான்

252. தமிழக எழுத்தாளர் லக்ஷ்மியின் இயற்பெயர் என்ன?

எஸ். திரிபுரசுந்தரி

253. சாவி என அழைக்கப்படும் தமிழக எழுத்தாளர் யார்?

திரு. சா. விஸ்வநாதன்

254. ஈழத்துச் சோமு என அழைக்கப்படும் இலங்கை எழுத்தாளர் யார்?

என். சோமகாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

255. கவியோகி சுத்தானந்த பாரதியார் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு முதன் முதல் விஜயம் செய்த தினம் எது?

30- 11- 1952

256. பொலநறுவையின் புராதன பெயர் என்ன?

புலஸ்திக நகர்

257. இலங்கையில் மிகவும் உயரமான புத்தர் சிலையை எங்கு காணலாம்?

அவுக்கணையில்

258 நவீனஓவியக்கலையின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

பிக்காசோ

259. பொலநறுவையிலுள்ள இரண்டாம் சிவாலயத்தின் பெயர் என்ன?

வானவர் மாதேவி ஈஸ்வரம்

260. இலங்கை இந்தியக் கலையின் சிறப்புக்களை வெளிநாட்டவர்களுக்கு விளங்க வைத்தவர் யார்?

டாக்டர் ஆனந்தக் குமாரசுவாமி

261. நவதானியங்கள் எவை?

உழுந்து, எள், கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல், பயறு

262. இலங்கையில் பல்கலைக் கழக மட்டத்தில் பண்ணிசைத் துறை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

263. திருச்சந்த விருத்தம் பாடியவர் யார்?

திருமழிசை ஆழ்வார்

264. ஆன்மாவின் ஆறு குணங்களும் எவை?

மோகம், மதம், இராகம், விசாரம், கோசம், வைசித்திரியம்

265. ஏழுவகைத் தீட்சைகளும் எவை?

நயனம், ஸ்பரிசம், மானசம், வாசகம், சாத்திரம், யோகம், ஔத்திரி

266. சாக்த சமயத்தின் ஆதார நூல்கள் எவை?

தேவிபாகவதம், ஆனந்தலகரி, சௌந்தர்யலகரி

267. ஆறுமுகநாவலரின் குரு யார்?

சேனாதிராய முதலியார்

268. கீரிமலையிலுள்ள தீர்த்தத்தின் பெயர் என்ன?

கண்டகி தீர்த்தம்

269. பஞ்சாயுதங்களும் எவை?

சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு

270. சிவபெருமான் திருவந்தாதி என்ற நூலைப் பாடியவர் யார்?

பரணதேவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

271. பிரமதேவரும் சரஸ்வதியும் முருகப்பெருமானை தரிசித்து வணங்கிய தலமெது?

திருத்தணிகை

272. சிவபெருமான் மும்மணிக் கோவை பாடியவர் யார்?

இளம் பெருமானடிகள்

273. பதினென் புராணங்களும் யாரால் இயற்றப்பட்டன?

வேதவியாசர்

274 இலங்கையின் தேசிய மரம், தேசிய மிருகம்' தேசிய மலர் ஆகியவற்றைத் தருக?

தேசிய மரம்—நாகா. தேசிய மிருகம்—யானை. தேசிய மலர்—அல்லி.

275 இலங்கை வர்த்தமானி செய்தித்தாளை ஆரம்பித்தவர் யார்?

ஆள்பதி வில்மட் ஹோட்டன்

276. இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக வலயங்கள் எவை?

கட்டுநாயக்கா, பியகம, வெலிசற

277. ஔவையார் இயற்றிய நூல்கள் எவை?

ஆத்திசூடி கொன்றைவேந்தன், நல்வழி,மூதுரை அசதிக்கோவை,விநாயகர் அகவல், அட்டாங்க யோகக் குறள்

278. நின்றபடி அடைகாக்கும் பறவை எது?

பென்குயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

279 இந்திராகாந்தியைச் சுட்டுக்கொன்ற சீக்கிய மெய்காப்பாளர் இருவரும் யாவர்?

பான்சிங், சத்துவான்சிங்

280. வியட்நாமிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பிரதான கெரில்லாக் குழுவின் பெயர் என்ன?

வியட்கொங்

281. "இது எனக்கு மட்டுமல்ல, மனித குலத்துக்கே ஒரு பேரடி" என்ற வாசகத்தை வெளியிட்டவர் யார்?

நீல் ஆம்ஸ் ரோங்

282. இலங்கையின் நீள அகலங்களைக் கிலோ மீற்றரில் தருக.

நீளம். 432 கி மீற்றர் அகலம் 524 கி மீற்றர்

283. உலகின் நீண்ட நதி எது?

அமேசன்

284. எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் எத்தனை மீற்றல்?

8848 மீற்றர்

285. சர்வதேச வெப்பவலய விவசாயத் தாபனம் அமைந்துள்ள இடம் எது?

நைஜீரியா

286 இலங்கையில் முதன் முதல் ஆரம்பமான ஆசிரியர் கிராமம் எங்கேயுள்ளது?

கண்டி மாவட்டத்திலுள்ள கம்பகாத் தொகுதியில் டெல்பிட்டிய என்ற இடத்தில் உள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

287. அண்மையில் ஞாபகார்த்த சிலை எழுப்பப்பட்ட இரு தேசத் தலைவர்கள் யாவர்?

சேர் ஒலிவர் குணதிலக. சேர். ஜோன். கொத் தலாவல

288. சிங்கள மொழியில் எழுதப்பெற்ற முதல் அகராதி எது? எழுதியவர் யார்?

சுமங்கள அகராதி — சோரட்ட தேரோ

289. இலங்கையில் ஆயுள் வேத வைத்திய ஆராய்ச்சி நிலையம் எங்கேயுள்ளது?

நாவின்ன

290. இலங்கையின் முதல் மூன்று தேசாதிபதிகளும் யாவர்?

பிரெடறிக் நோத், சோல்பரி பிரபு, சேர், ஒலிவர் குணதிலக

291. உலகின் சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படும் நாடு எது

கியூபா

292. உலகில் அதி உயரத்திலுள்ள நாடு எது?

பொலிவியா

293. இலங்கையின் தென்னை முக்கோணப் பிரதேசங்கள் எவை?

குருநாகல், கொழும்பு, சிலாபம்

294. இரண்டாயிரம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கே நடை பெற உள்ளன?

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில்

295. விண் வெளிப் பயண விதிகளை வரையறுத்த முதல் அறிஞர் யார்?

சேர். ஐசக் நியூட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

296. பாக்கு நீரிணையை 1954ம் ஆண்டு முதன் முதல் நீந்தி கடந்தவர் யார்?

முருகுப்பிள்ளை நவரெத்தினசாமி

297. உலகிலேயே மிக நீளமான புகையிரதப் பாதை எங்குள்ளது? நீளம் யாது?

ரஷ்யாவில் உள்ளது. நீளம் 9332 கிலோ மீற்றர்

298. உலகில் மிக நீளமான மலை எது?

அந்தீஸ் மலை நீளம் 7241 கிலோ மீற்றர்

299. வற்றுப் பெருக்கு என்றால் என்ன?

காலத்துக்கு காலம் சமுத்திர நீரானது உயர்ந்தும் தாழ்ந்தும் மாறி மாறி அமைதல்

300. ஐரோப்பாவின் விளையாட்டு மைதான மெனப்படும் நாடு எது?

சுவிற்சலாந்து

301. இலங்கையின் முதலாவது பெண்கள் பாடசாலை எது? எப்போது நிறுவப்பட்டது?

உடுவில் மகளிர் கல்லூரி – 1824

302. இலங்கைப் புற்றுநோய் தடுப்புச் சங்கம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

1948

303. ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் எத்தனை?

185



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 4. ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் யார்?

கொபி அனான்

305. புலிட்சர் விருது யாரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகிறது?

நியூ யோக் வேல்ட் என்னும் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரான ஜோசப் புலிட்ஸர் என்பவரின் ஞாபகார்த்தமாக

306. உலகின் மிகவும் பழமை வாய்ந்த செய்தி ஸ்தாபனம் எது

ரொய்டர் – நிறுவியவர் ரொய்டர்

307 பூகம்பத்தை அளவிட பயன்படுத்தப்படும் றிச்ரர் அளவு கோலைக் கண்டுபிடித்தவர் யார்?

றிச்ரர்

308. முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு எங்கே எப்போது நடைபெற்றது?

மலேசியாவின் தலை நகரான கோலாலம்பூரில் **1966** ல்

தொகுப்பு:
நயினை இராகுலன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குடும்ப விருட்சம்

சின்னத்தம்பி ஆறுமுகம் சின்னாச்சிப்பிள்ளை

| | (துணைவர்) |
|---|---|
| தங்கம்மா | — வேலுப்பிள்ளை |
| சோமசுந்தரம் | — கனகம்மா |
| மனோன்மணி | — கனகலிங்கம் |
| செல்லம்மா | — கந்தையா |
| பராசக்தி | — சுப்பிரமணியம் |

காசிப்பிள்ளை இராமலிங்கம் - நல்லம்மா

| | (துணைவர்) |
|---|---|
| மங்கையற்கரசி | — மகாலிங்கம் |
| கனகம்மா | |
| சண்முகலிங்கம் | — கலைவாணி |
| புவனேஸ்வரி | — நவரெத்தினம் |
| கணேசலிங்கம் | — விமலாதேவி |
| சிவகாமசுந்தரி | — தவேஸ்வரன் |

கணபதிப்பிள்ளை — கனகம்மா

| | |
|---|---|
| கிருஸ்ணசாமி | — செல்வராணி |
| கமலாம்பிகை | — கிருஸ்ணசாமி |
| சங்கரலிங்கம் | — பத்மராணி |
| தருமலிங்கம் | — நாகலெட்சுமி |

தவஈஸ்வரி

மகேஸ்வரன்

கேசவராணி

தியாகேசன்


கேதீஸ்வரன்

பாலேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# நன்றி நவிலல்

1999-05-19ம் திகதியன்று எதிர்பாராத வகையில் எம்மையெல்லாம் விட்டு திடீரெனப் பிரிந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும், கடித மூலமும், தொலைபேசி மூலமும், ஆறுதல் கூறிய அனைவருக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளின் போது கலந்து கொண்டோருக்கும், மலர் வளையம், மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியோருக்கும், சடங்கு, அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திக்காக வேண்டி நின்றோருக்கும். குறுகிய காலத்திற்குள் ஞாபகார்த்த மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த ஆனந்தா அச்சகத்தாருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

7ம் வட்டாரம்,
நயினாதீவு
18.06.99

**மனைவி, மக்கள்**
**மருமக்கள் உற்றார்**
**உறவினர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org